விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 17 செவ்வாய்க்கிழமை (31.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நிபுணர் குழுவின் குற்றச்சாட்டை

# இலங்கை விசாரிக்க வேண்டும்!

## நவநீதம்பிள்ளை காட்டம்



(ஜெனீவா)


வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து ஐ.நா. நிபுணர்கள் குழு முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகபூரணவிசாரணையை நடத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது என ஐ.நா. மனிதவுரிமைகள் குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 17–வது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நேற்று ஆரம்பமானது. ஜூன் மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக் கூட்டத்தொடரின் ஆரம்பவுரையை நவநீதம்பிள்ளை மேற்கொண்டார்.

அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது,

இலங்கை யுத்தம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில், போர் தொடர்பான அனைத்துலகச் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து கடுமையான குற்றச்சாட்டுக்களை இந்த அறிக்கை முன்வைத்துள்ளது.

இக் குற்றச்சாட்டுக் (20ஆம் பக்கம் பார்க்க)



புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்து உரையாடினார். இச் சந்திப்பில் ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை தொடர்பாகவும் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுச் செயலகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# சனல் 4 வெளியிட்ட வீடியோ உண்மையானது

## ஐ.நா.பிரதிநிதி விபரிப்பு

(ஜெனீவா)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் படைத்தரப்பினரால் படுகொலை செய்யப்படும் காட்சிகள் அடங்கிய வீடியோ பதிவு உண்மையானது என நேற்று ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 17–வது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப் போரின்போது சர்வதேசப் போர் நியமங்களுக்கு எதிரான போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதை இவ் வீடியோக் காட்சி உறுதி செய்வதாகவும் இவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் நேற்று ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பிலான சிறப்பு சட்ட வல்லுநர் கிறிஸ்டாவ் ஹெய்ன்ஸ் சமர்ப்பித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

# ஜூலை 23ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்

(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை ஒத்திவைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீற ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் கடந்த 12ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு உத்தரவிட்டிருந்தது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தமைக்கு எதிராக ஏராளமான வழக்குகள் அரசியல் கட்சிகளாலும், சுயேட்சைக் குழுக்களாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை குறித்த நிபுணர் குழுவின் குற்றச்சாட்டு ஆதாரமற்றவை

## அமைச்சர் சமரசிங்க வாதம்

(ஜெனிவா)

ஐ.நா.நிபுணர் குழுவில் இலங்கை குறித்து கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான இலங்கையின் சிறப்பு தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று ஆரம்பமான ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 17ஆவது கூட்டத்தொடரில் நவநீதம்பிள்ளை ஆற்றிய உரைக்கு பதில் அளிக்கையிலேயே, அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை கூறுவதற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

**நாளை...**

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக முதல்வரைச் சந்திப்பேன்

## ரணில் சென்னையில் தெரிவிப்பு

(சென்னை)

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை விரைவில் சந்திக்க உள்ளேன் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரு நாட்கள் பயணமாக ரணில் இந்தியா சென்றுள்ளார். டில்லி செல்லும் வழியில் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து சந்தித்துப் பேச்சு நடத்த தமிழக முதல்வர் ஜெயலலிதா எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஜெயலலிதா என்னைச் சந்திக்க அழைப்புவிடுத்துள்ளது மகிழ்ச்சி தருகிறது. விரைவில் அவரைச் சந்திப்பேன் . ஐ.நா.சபையின் குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை உறுப்பு நாடாகவில்லை. இது தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கை அரசு கையெழுத்தும் போடவில்லை. எனவே இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்தவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இதில் விசாரணைதான் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# மஞ்சத் திருவிழா நேரடி ஒலிபரப்பு

(இணுவில்)

இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் ஆலய மஞ்சத் திருவிழா இன்று நடைபெறுகிறது. இதன் நேரடி வர்ணனையை இலங்கை வானொலியின் யாழ். அலைவரிசையூடாக இரவு 7.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை கேட்க முடியும். இதன் வர்ணனையை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் தொகுத்து வழங்குவார். (ச-6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)



அல்வாயில் உள்ள கலையகத்தில் அவை இலக்கிய வட்டத்தில் 36ஆவது ஒன்றுகூடலில் எழுத்தாளர் தெணியான் தலைமை உரையாற்றுவதையும் பேராசிரியர் ச.மௌனகுரு தனது நாடக அனுபவங்களை பகிர்வதையும் யாழ்.நாட்டார் வழக்கியற் கழகத்தினர் இசை நாடகப் பாடல்களை இசைப்பதையும் ஜீவநதியின் பிரதம ஆசிரியர் க.பரணிதரன் நன்றியுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

# கொமாண்டோ படைக்கு உதவிய 'ஸ்னோவி' நாய் உயிரிழப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில்- கொமாண்டோப் படையினரின் வழிகாட்டியாகச் செயற்பட்டபோது, காயமடைந் திருந்த ஸ்னோவி என்ற நாய் கடந்த 24ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

4வது கொமாண்டோப் படைப் பிரிவின் கோப்ரல் சம்பத் இந்த நாயை 2004ஆம் ஆண்டு தொடக்கம் பயிற்சி கொடுத்து பராமரித்துவந்தார்.

இராணுவத்தில் எஸ்-080 என்ற இலக்கம் வழங்கப்பட்டிருந்த இந்த நாய் வெலிஓயா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலிகளின் மறைவிடங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தது.

2008 மார்ச் 15ஆம் திகதி கொம்பிலிஓயா காட்டுப்பகுதியில் நடந்த மோதல் ஒன்றின்போது கொல்லப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் உடையின் ஒரு பகுதியை இந்த நாய் எடுத்து வந்துகொண்டிருந்தபோது திடீரென எதிர்த்திசையில் இருந்த மற்றொரு புலிகள் இயக்க உறுப்பினர் படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன் கைக்குண்டை வீசினார்.

கைக்குண்டு வெடிப்புச் சிதறல் ஒன்று ஸ்னோவியின் தலையில் பாய்ந்து படுகாயமடைந்தது. உடனடியாக அது உலங்கு வானூர்தி மூலம் அனுராதபுரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து பெரதெனியாவில் உள்ள மிருக மருத்துவப் போதனா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

மிருக மருத்துவநிபுணர் அசோகா பங்கொல்ல தலைமையிலான மருத்துவ நிபுணர்கள் குழு சத்திரசிகிச்சை மேற்கொண்டு இந்த நாயைக் காப்பாற்றினர்.

மிகவும் மோசமான நிலையில் காயமடைந்திருந்த இந்த நாய்க்கு வேறொரு நாயின் குருதியும் ஏற்றப்பட்டது. இந்த நாய் போரின்போது வழங்கிய பங்களிப்புக்காக ரணவிக்கிரம என்ற பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பல வெற்றிகளுக்கு இந்த நாய் காரணமாக இருந்தாக கொமாண்டோப் படைப் பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

குறிப்பாக வேவு நடவடிக்கைகளுக்காக மறைந்திருக்கும் விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்களை காடுகளில் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளிலும், ஆழ ஊடுருவும் அணிகளுக்கான வழிகாட்டியாகவும் இந்த நாய் செயற்பட்டுள்ளது.

இந்த நாயின் இழப்பு கொமாண்டோப் படைப்பிரிவின் றெஜிமென்ட் தலைமையகத்தில் இராணுவ மரியாதைகளின் பின்னர் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் இராணுவ அதிகாரிகள் மற்றும் கொமாண்டோ படையினரும் கலந்துகொண்டனர். (ச-5)

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் வர்த்தக நிலையமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

- கணக்காளர்
- காசாளர்
- பில்கிளார்க்
- களஞ்சியக் காப்பாளர்
- காகிதாதிகள் மற்றும் பத்திரிகைத்தாள் கையாளுநர்

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆங்கில அறிவு மற்றும் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொழிலாளர்கள் தகைமையுடையவர்கள் தமது சுயவிபரமும் தொலைபேசி இலக்கமும் அடங்கிய விண்ணப்பங்களை

விளம்பர இல. சி-3325
மே/பா , வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
(C-3325)

**காணி விற்பனைக்கு**

- வதிரிச் சந்தியிலிருந்து திக்கம் வீதியில் நெல்லியடி மெ.மி.த.கலவன் பாடசாலை முன்பாக அரசடி வீதியில் 200 m தூரத்தில் நாலரை (4 1/2)பரப்புக் காணியும்
- பொலிகண்டி இலுப்பைக் கன்றடியில் 2 பரப்பு காணியும்
- பொலிகண்டி தோட்டத்தில் 2 3/4 பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
பொலிகண்டி T.P.: 0778452097
(சி-3335)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு கே.கே.எஸ்.வீதிக்கு அண்மித்ததாகவுள்ள 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778730701
(5056)

**காணிவிற்பனை**

தாண்டிக்குளம் வவுனியாவில் A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் சாந்தசோலை பிரதான வீதியில் ஒருஏக்கர் காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பு 5 லட்சம். 4 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கலாம்.

தொடர்பு :0244903188/0770879110
◆ உறுதியை நீங்களே காணிக் கச்சேரியில் சரிபார்த்துக் கொள்ளலாம்.
(5010)

**கோவில் சிலைகள், மணி மற்றும் உபகரணங்கள் செய்து கொடுக்கப்படும்**



திருவாசி,கலசம்,கொடிஸ்தம்பம்,வெண்கல சுவாமி சிலைகள், கருங்கல் சிலைகள் இன்னும் கோவிலுக்குத் தேவையான உபகரணங்கள் பாரம்பரிய வேலைக்காரர்களால் செய்து தரப்படும்.

கோவிலிலுள்ள பழைய பித்தளை, செம்பு இருப்பின் உருக்கி கோவிலுக்குள்ளேயே வைத்து செய்து தரப்படும்.

சுத்தமான வெண்கலமணி 10 கிலோவிலிருந்து 1000 கிலோ வரை நல்ல ஓசை ஏற்படக்கூடிய விதமாக செய்து தரப்படும்.

இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் வேலை செய்து கொடுத்துள்ளோம்.

தயவு செய்து தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

C.S. பத்மலால்
இல.11 ,தேகசவ்பார,
மொறட்டுவ.
T.P.: 0776565504, 0770842469
(5051)

# பணி நயப்பு வாழ்த்துரை

## திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்



'தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்; தோன்றலிற் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் தனது தற்போதைய அகவையில் மூன்றில் இரண்டு பங்கினை மாணவர் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணித்து தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறுகின்றார். இவர் எமது பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டி கல்வியின் மகத்துவத்தை,ஏழைச்சிறார்களும் உணர்ந்து கொள்ளும் வகையில் தனது அயரா உழைப்பினால் பாமர மக்களின் உள்ளத்திலும் இடம் பிடித்துள்ளார் என்றால் மிகையாகாது.இயல்வது கரவேல் என்ற வாசகத்தை தாரக மந்திரமாகக்கொண்டு தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து கல்வித்துறைசார் உத்தியோகத்தர்கள் அனைவரையும் அரவணைத்து, வருங்கால சந்ததியினர் சமூகம் சார்ந்த நற்பிரசைகளாக மிளிர இரவு பகல் பாராமல் தனது கடமைகளைச் செய்து வெற்றி பெற வீறுநடைபோட்ட ஒரு பணிப்பாளர் ஆவார். இவரது சேவை என்றும் போற்றப்படும் ஒன்றாகும் இவரது ஓய்வுகாலத்தில் குடும்பத்துடன் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவன் அருள்புரிவராக!

**இவர் இதுவரையாற்றிய கல்விப்பணிக்காக மாகாணகல்வித் திணைக்களம் நன்றி கூறுகிறது.**

**ப.விக்னேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர்**

(C-3334)

# இன்று ஒரு தகவல்

## காளிதாசன் காட்டும் அரசன்

அந்தக் காலத்தில் ஒருவன் கடல் வாணிபம் செய்வதற்காக சென்றான். அவன் சென்ற கப்பல் உடைந்து கடலில் மூழ்கியது. அதில் அவனும் இறந்து விடுகிறான். அவனுக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. ஆனால் வாரிசு இல்லை. முறைப்படி வாரிசு இல்லாத சொத்து அரசாங்கத்துக்குத் தானே சேர வேண்டும்!

எனவே அந்தநாட்டின் நிதியமைச்சர் அரசருக்கு ஒரு குறிப்பு அனுப்புகிறார்.'' கடல் வாணிபம் செய்யப் போன பெரிய வியாபாரி ஒருவன் கப்பல் உடைந்து இறந்து போனதாலும்–அவனுக்கு சந்ததி இல்லை என்பதாலும்– அவனுடைய சொத்து முழுவதும் அரசாங்கக் கஜானாவைச் சேர்ந்து விட்டது'' என்ற குறிப்பை அமைச்சர் அரசருக்கு அனுப்பி வைத்தார்.

அந்த அரசர் பார்த்தார். யோசித்தார்.

"அவ்வளவு செல்வத்தையும் உடனே அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம்'' என்ற முடிவுக்கு அவர் வரவில்லை; அவசரப்படவும் இல்லை.

அவர் நிதானமாக சிந்தனை செய்தார்.

''அந்த நபர் ஒரு பெரிய வியாபாரி என்றால் அவன் இரண்டு மூன்று, பெண்களை திருமணம் செய்து கொண்டிருப்பானே... அப்படியிருந்தால் அவனது மனைவிமார்களில் யாராவது கர்ப்பமாக இருக்கிறார்களா என்று விசாரிக்க வேண்டும்'' என்று கூறினார்.

அதன்படியே அரசாங்க அதிகாரிகள் விசாரித்ததில் இறந்துபோன அந்த வியாபாரியின் மனைவி ஒருத்தி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

உடனே ராஜா, "அந்த வியாபாரியின் சொத்து அரசாங்க கஜானாவுக்கு வரவேண்டியதில்லை; அந்தச் செல்வம் முழுவதும் கர்ப்பத்தில் இருக்கும் அந்தக் குழந்தைக்குத் தான் சேர வேண்டும்!'' என்றார்.

இப்படி தீர்ப்பு வழங்கிய அந்த ராஜா யார் தெரியுமா?

துஷ்யந்தன்.

ஆமாம்!

காளிதாசன் எழுதிய சாகுந்தலத்தில் வரும் ஒரு காட்சிதான் இது.(ஆறாவது அங்கம்).

காளிதாசனின் மற்றொரு காவியமான " இரகுவம்சம்'' சூரியவம்சத்தைச் சேர்ந்த அரசர்களை பற்றி வரிசையாகக் கூறுகிறது.

அதில் ''ரகு'' என்ற மன்னன் ஒரு காரியம் செய்கிறார். அந்த மன்னர் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் வெற்றி பெற்று ஏகப்பட்ட செல்வங்களுடன் தலைநகரம் திரும்புகிறார். அந்த சொத்து முழுவதையும் அவர் என்ன செய்தார் தெரியுமா?

"விஸ்வஜித்'' என்ற ஒரு யாகம் செய்து செல்வத்தை அவர் மக்களுக்குத் தானம் செய்து விடுகிறார்... தட்சனையாகவே கொடுத்து விடுகிறார். ஏற்கனவே தம்மிடம் இருந்த சொத்துக்களையும் தானம் செய்து விடுகிறார்.

அந்தக் காலத்திலெல்லாம் ஒருவர் அரசராக ஆக வேண்டுமெனில் அதற்கு முன் அதற்கான தகுதிகளைச் சம்பாதிக்க வேண்டும் என்பது முற்றிலும் அவசியமாக இருந்தது.

குருகுலவாசம் செய்ய வேண்டும்–சாஸ்திரங்களெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். தர்மத்திலும் பண்பிலும் அவர்கள் உயர்ந்தவராக இருக்க வேண்டும். " ஒருவர் அரசராக ஆகி வெளியில் இருக்கும் விரோதிகளை ஜெயிப்பதற்கு முன்னால் காமம், கோபம் போன்ற உள்ளே இருக்கும் ஆறு விரோதிகளை வெற்றி கொள்ள வேண்டும்'' என்று சாஸ்திரம் கூறுகிறது. ஓர் அரசன் பொது மக்களிடமிருந்து எப்படி வரி வசூல் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கூட அப்போது சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு வண்டு எப்படி மலருக்கு வலி தெரியாமல் தேனை எடுத்துக் கொள்கிறதோ அதுபோலவே அரசன் குடிமக்களுக்குக் கொஞ்சம்கூட சிரமம் தெரியாமல் அவர்களது மலர்ச்சி குன்றாமல் வரி வசூலித்து எடுத்து கொள்ள வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இதையே இன்னும் ஒரு உவமையால் காளிதாசன் பின்வருமாறு அழகாக எடுத்துக் கூறுகிறார்.

சூரியன் எப்படி பூமியிலிருந்து நீரை உறிஞ்சிக் கொண்டு பின்னர் அதையே மழையாகப் பொழிகிறதோ, அதுபோல் அந்த அரசன் (திலீபன்) குடிமக்களிடமிருந்து வரிவசூல் செய்ததை அதன் பின்னர் அந்த மக்கள் நலனுக்கே செலவிட்டான்.

எனவே ஒரு நாட்டுக்கு அரசனாவது என்பது சாதாரண விடயமல்ல.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த.(உ/த) விஞ்ஞான பிரிவினருக்கான மாகாணமட்ட மதிப்பீட்டு பரீட்சை

(பூநகரி)

2011 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்டத்திலான மதிப்பீட்டுப் பரீட்சை புதிய வினாத்தாள் மாதிரிக்கமைய எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை உரிய நேரசூசிக்கமைவாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கமைய பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதிகளை உரிய பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சைகளை நடத்துவதோடு விடைத்தாள்களை மதிப்பீடு செய்து ஒரு வாரத்தில் கல்வி அபிவிருத்திப் பிரிவிற்கு புள்ளிப் பகுப்பாய்வுடன் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதில் 8 ஆம் திகதி 9 மணி தொடக்கம் 12 மணிவரை உயிரியல் பகுதி-II, இணைந்த கணிதம் பகுதி-II பரீட்சைகளும், 9 ஆம் திகதி 9 மணி தொடக்கம் 11 மணி வரை உயிரியல் பகுதி- I,9 மணி தொடக்கம் 12 மணி வரை இணைந்த கணிதம் பகுதி-I பரீட்சைகளும், 13 ஆம் திகதி 9 மணி தொடக்கம் 12 மணிவரை பௌதீகவியல் பகுதி-II பரீட்சையும், 14 ஆம் திகதி 9 மணி தொடக்கம் 12 மணிவரை பௌதீகவியல் பகுதி-I பரீட்சையும், 16ஆம் திகதி 9 மணி தொடக்கம் 12 மணி வரை இரசாயனவியல் பகுதி-II பரீட்சையும், 17 ஆம் திகதி 9 மணி தொடக்கம் 11 மணிவரை இரசாயனவியல் பகுதி-I பரீட்சையும் நடைபெறவுள்ளது. ஸ்ரீ

# கொலை சந்தேகநபர்கள் பிணையில் விடுவிப்பு

வயோதிபர் ஒருவரை கொலை செய்த இரு சந்தேக நபர்களை நிபந்தனைப் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி மந்துவில் மேற்கு பகுதியில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடந்த வேலு சின்னத்தம்பி என்ற வயோதிபரின் கொலை தொடர்பான வழக்கு நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். பரமராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.வழக்கை விசாரித்த நீதிபதி இரு நபர்களையும் தலா 15 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் தலா 2 இலட்சம் ரூபாஆள் பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் தினமும் கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

# ப.நோ.கூட்டுறவு சங்கத்திலிருந்து காலாவதியான பொருட்கள் மீட்பு

கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்க ஊரியான் கிளையில் கண்டாவளை பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் காலாவதியான மென்பானங்கள், ரின்பால், பாவனைக்குதவாத கொண்டற்கடலை என்பன மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த ப.நோ.கூ. சங்கக் கிளைக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி பெ.சிவகுமார் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். அத்துடன் பொதுமுகாமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் காலாவதியான பொருட்களை அகற்றும்வரை நிறுவன விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார் ஸ்ரீ

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 60 |
| தக்காளி | 40 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 70 | 60 | 70 |
| கரட் | 70 | 100 | 90 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 20-25 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 110 |
| பெரிய வெங்காயம் | 65 | 50 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 90 | - |
| பயற்றங்காய் | 40-50 | 60 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | - | 80 | 70 |
| கறிமிளகாய் | 90 | 70 | 90 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 |
| போஞ்சி | - | 100 | - |
| கத்தரிதம்புள்ள | - | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 8-10 | 30 | 30 |
| தேசிக்காய் | 140-150 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

**31.05.2011**

**(வைகாசி 17, செவ்வாய்க்கிழமை)**

**சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு**

**சதுர்த்தசி பின்னிரவு 2.24 மணிவரை**

**பரணி பிற்பகல் 12.18 மணிவரை**

**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**

**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**

**கார்த்திகை விரதம்**

**மேடம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவுப் பலிதமுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், தொழிலில் உயர்ந்த நிலையடைய சந்தர்ப்பம் கைகூடி வரலாம்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும்,நல்ல தகவலைத்தரும் கடிதங்கள் வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**சிங்கம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகலும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டுபிடிக்கலாம்.

**துலாம்** குலதெய்வப் பிராத்தனைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்,தம்பதிகளிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** விரதம்,வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், மனக்குழப்பம் அகலும், பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிக்கும் நாள்.

**தனுசு** வாய்ப்புக்கள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புத்திரரால் நன்மையுண்டு.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்,மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், காலையில் நிறுத்தி வைத்த வேலையொன்றை மாலையில் செய்து முடிப்பீர்கள், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேகரிக்கும்.

**மீனம்** எதிர்பாராத தனலாபம் இல்லம் வந்து சேரும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைச் கொடுக்கும், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்

# மகத்தான கல்விப் பணியாற்றிய யாழ்.வலய

# கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்



## சமூகத்தை ஒருங்கிணைத்து கல்விச் சாதனை படைத்தவர்

தமிழ்ப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு மகத்தான சேவையாற்றி தனது அறுபதாவது வயதில் 02.06.2011 இல் ஓய்வுபெறும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் சிறந்த கல்விநிர்வாகி மட்டுமல்ல, சமூக ஒருங்கிணைப்புடன் சகல தரப்பையும் ஒன்றிணைத்துக் கல்விப் பணியை முன்னெடுத்தவர் என்ற பெருமைக்கும் உரியவர்.

2008ஆம் ஆண்டு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக அவர் பதவியேற்ற போது அவரின் கல்விப் பணியின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் அவர் வலம்புரிக்கு வழங்கிய செவ்வியில் அதிபர்கள், ஆசிரியர்கள் எவரும் தங்களின் பணிசார் பிரச்சினைகளை என்னிடம் எந்த நேரத்திலும் கூறமுடியும். அவர்களின் பணிசார் பிரச்சினை களைத் தீர்க்காமல் எங்களால் எந்தப் பணியையும் முன்னெடுக்க முடியாது எனக் கூறியிருந்தார்.

தனது கூற்றை வெற்றிகரமாக நிறைவேற்றி யாழ்ப்பாணக் கல்விப் புலத்தில் ஒரு சாதனைப் பயணத்தை ஆரம்பித்து வைத்துள்ளார் என்பதில் எதுவித மிகைப்படுத்தலும் இருக்கமுடியாது. திணைக்களத் தலைவர்கள் தமக்குக் கீழ் பணிபுரிபவர்களிடமிருந்து தனித்து சேவையை வேண்டுபவர்களாக மட்டும் இருப்பார்களாயின் அவர்கள் சிறந்த முகாமையாளர்களாக-சிறந்த நிர்வாகிகளாக இருக்கமுடியாது.

மாறாகத் தமது பணியாளர்களின் நலன்சார் விடயங்களிலும் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். இத்தகையவர்களே சிறந்த நிர்வாகிகள் எனப் போற்றப்படுவதுடன் மற்றவர்களுக்கு உதாரணமாகவும் மற்றவர்களின் மனதை வென்றவர்களாகவும் இருக்க முடியும் என்ற முகாமைத்துவ சிந்தனைக்கு யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் சிறந்த எடுத்துக் காட்டு எனலாம்.

பாடசாலை நிறைவடைந்த பின்னர் ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரை நேரில் சந்தித்து தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தமை ஆசிரியர்களின் மனமுவந்த சேவையைப் பெறுவதற்குக் காரணமாயிற்று எனலாம்.

ஓய்வுக்காலத்தை நெருங்கும் இவ்வேளையில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களைச் சந்தித்தோம்.

2008 ஆம் ஆண்டு சந்தித்தபோது இருந்த அதே மனநிலை, நிறைவாகப் பணி செய்த திருப்தி. காய்த்த மரத்திற்குக் கல்லெறியும் எங்கள் கலாசாரத்தின் எல்லைகளைத் தாண்டி சாதனை படைத்த மிடுக்கு. இன்னும் ஒருவருட மேனும் உங்கள் சேவையைத் தொடருங்கள் என உயர்மட்டத்தில் விடுக்கப்பட்ட அழைப்பு என எல்லாம் சேர்ந்து அவரின் சேவைச் சிறப்பிற்கு அணி சேர்க்க, மனநிறைவும் முகமலர்வோடும் அவர் எங்களோடு பேசினார்.

### ஆசிரியர்களின் மனம் நோகக்கூடாது

ஆசிரியப் பணி புனிதமானது. அந்தப் புனிதமான பணியை வழங்கும் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். ஆசிரியர்கள் நிர்வாக ரீதியாக அலையக்கூடாது. தென்மராட்சி கல்விவலயத்திலும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலும் நான் பணிப்பாளராக இருக்கும் வேளையில் சகல ஆசிரியர்களினதும் தனிப்பட்ட கோவைகளைச் சீர்படுத்தியதுடன் முகாமைத்துவ உதவியாளர்கள், ஆசிரியர்களின் சேவையை மதிக்க வேண்டுமெனக்கூறி அவர்களின் ஒத்துழைப்புடன் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தேன்.

ஆசிரியர்கள் தமக்கு ஏற்படும் நிர்வாகம் சார் பிரச்சினைகளை என்னிடம் கூறுவதற்கு நான் ஒரு போதும் தடை போட்டதில்லை.

ஆசிரியர்களை நாம் கௌரவிக்கும் போதுதான் அவர்களை மாணவர்களும் மக்கள் சமூகமும் மதிக்கும். இதற்காக ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வுகளைச் செய்தோம். எங்களோடு பணி செய்பவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களிடம் இருந்து மனமுவந்த சேவையைப் பெறமுடியும்.

என்னைப் பொறுத்தவரை எங்கள் இலக்குகளும் அபிவிருத்தித் திட்டங்களும் வெற்றியடைய வேண்டுமாயின் அதிபர்கள், ஆசிரியர்கள் மகிழ்வான சூழமைவில் தமது பணியை ஆற்றக் கூடியதான நிலையை நாம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இதுவே யதார்த்தம். இதனை நான் செம்மையாகச் செய்தேன் என்றே கூறுவேன். அதன்மூலம் எமது மாணவச் செல்வங்களின் கல்விச் செயற்பாட்டில் முன்னேற்றகரமான சாதனைகளை எங்களால் அடைய முடிந்தது.

### எழுத,வாசிக்கத் தெரியாத மாணவர்கள்

மாணவர்களிடமிருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்பதை அறிந்து கொள்ளாமல், அந்தப் பிரச்சினைகளைப் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறாமல் வெற்றிகரமான கற்றல் செயற்பாடென்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக நான் கடமையேற்ற போது ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் சென்று மாணவர்களின் நிலையை அறிந்தேன். எழுத,வாசிக்கத் தெரியாத மாணவர்கள் தரம் ஒன்றில் இருந்து தரம் 11 வரை இருந்தனர். இதில் தரம் 6 இல் இருந்து தரம் 11 வரை 3531 மாணவர்களுக்கு எழுத, வாசிக்க தெரியவில்லை. இது மிகப் பெரும் பரிதாபநிலை.

எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்காக விசேட வாசிப்பு முகாம்கள் அமைக்கப்பட்டன. அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு அவர்களையும் சேர்த்து திட்டம் தீட்டினோம்.

இரண்டு மாணவர்கள் என்றவாறு ஒவ்வொரு ஆசிரியர்களிடமும் பொறுப்புக் கொடுத்தோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்,உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்,பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புகள், தனிப்பட்ட கொடையாளிகள் என அனைவரையும் திரட்டி அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டோம்.

எழுதவும் வாசிக்கவும் கணிதத்தைப் புகட்டவும் வாசிப்பு முகாம்கள், கண்காட்சிகள், செயற்றிட்டங்கள், மாணவர் செயற்பாடுகள் என குறுகிய காலத்தில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். அதன் முடிவு வெற்றியாக அமைந்தது.

எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்ட மாணவர்கள் தங்கள் வழமையான கற்றல் செயற்பாட்டில் தீவிரமான ஆர்வம் காட்டினர்.

இந்த மகிழ்ச்சி எங்கள் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. அந்த வெற்றி எங்களின் அடுத்த பயணத்திற்கு வழிகாட்டியது.

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் ஆசிரிய ஆலோசகர்கள், உத விக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் ஆய்வு செய்து அதனை அறிக்கை களாக்கி அதிபர்களுக்கு விளக்கினோம்.

எமது மாணவர்களின் நிலை எப்படி உள்ளதென்பதை அறிவதற்கு இது பெருந்துணையாக இருந்தது. அங்கு இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான சீர்மியப்பணிகள் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டன.

இவை யாவற்றிக்கும் மேலாக மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோர்களின் பங்களிப்பைப் பெறுவதென்பது மிகவும் முக்கியமான விடயம். இது விடயத்தில் பின்தங்கிய பாடசாலைகளைச் சேர்ந்த பெற்றோர்களை அவர்களுக்கு வசதியான நேரங்களில் அவர்களின் இடங்களுக்குச் சென்று சந்தித்தோம். அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக குறுந்திரைப் படங்களைத் தயாரித்து அதை காட்சிப்படுத்தி அதன் மூலம் பெற்றோர்களின் பங்கை எம்மால் பெறமுடிந்தது. இவற்றுக்கு மேலாக அதிபர்களுக்கான கல்விச் சுற்றுலாவையும் ஏற்பாடு செய்தோம். ஏனைய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் நிலைமைகளை அறிவதன் ஊடாக எங்களை மதிப்பீடு செய்வது சுலபமாக இருக்கும் என்ற அடிப்படையில் அதிபர்களின் கல்விச் சுற்றுலா எமது பாடசாலை களில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை உறுதிபட கூறமுடியும்.



நேரடிச் சந்திப்பு

இத்தகைய பல்வகைமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுத்ததன் விளைவாக எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கண்டுள்ளது. இதனைப் பரீட்சைப் பெறுபேறுகள் சான்று பகரும் எனக் கூறிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கோப்பாய் கோட்டத்தில் எடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளையும் தற்போது அங்குள்ள பாடசாலைகளின் பெறுபேறுகள் அதிகரித்துள்ளதையும் நினைவு கூர்ந்ததுடன் எமது மாணவச் செல்வங்களின் கல்வி தொடர்ந்தும் வெற்றிப் பாதையில் பயணிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதாகக் கூறியபோது அவரின் அர்ப் பணிப்பும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் கலந்த சேவையின் தூய்மை பளிச்சிட்டது.

நா. கஜேந்திரன்

# இராணுவத் தலைமைத்துவப் பயிற்சி குறித்து நாடாளுமன்றில் விவாதிக்க வேண்டும்

## ஐ.தே.க. செயலர் தெரிவிப்பு

அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் அனைத்தும் நாட்டை இராணுவ மயமாக்கும் நடிவடிக்கைகளாகவே அமைந்துள்ளன. பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதுடன் பாடசாலை அதிபர்களுக்கும் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் பெரும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபை உட்பட 5 உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கி நகர கூட்டுத்தாபனம் அமைக்கும் முயற்சி அரச திணைக்களங்கள் பலவற்றின் உயர் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் செயல்முறை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ தலைமைத்துவப் பயிற்சி, பாடசாலை அதிபர்களுக்கு இராணுவ தலைமைத்துவ பயிற்சிக்கான முஸ்தீபு ஏற்றுக்கொள்ளமுடியாத நடவடிக்கைகளாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது, அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கு இடையூறாக இருப்பவர்களை பழிவாங்குவதும் தமக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு சூட்சுமமாக நடவடிக்கை எடுப்பதும் அரசாங்கத்தின் செயற்பாடாக மாறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் செல்வாக்கு அதிகமாக உள்ள பகுதிகளை இனங்கண்டு அதனை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை மிகவும் தந்திரோபாயமாக அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே கொழும்பு மாநகரசபை அடங்கலாக 5 உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கி நகர கூட்டுத்தாபனம் அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்தச் சபைகளை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருப்பதற்காகவே அரசாங்கம் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

அரச திணைக்களங்கள் பலவற்றின் உயர் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை அரசாங்கம் நியமித்து வருகின்றது. பல்கலைக்கழகங்களில் நிவர்த்தி செய்யப்படாத எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றபோதிலும் எவ்வித அறிவித்தல்களோ, கலந்துரையாடல்களோ இன்றி இராணுவ தலைமைத்துவப் பயிற்சியினை பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்குகின்றது. இந்த இராணுவத் தலைமைத்துவப் பயிற்சி குறித்து புத்திஜீவிகளுடனோ அல்லது பாராளுமன்றத்திலோ விவாதிக்கப்படவில்லை. குறைந்தபட்சம் பல்கலைக்கழக மாணவர்களின் அனுமதியைக்கூட பெறவில்லை.

அரசாங்கம் எதற்காக இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது என்பதே தற்போதைய கேள்வியாகவுள்ளது. தலைவர்களும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரசாங்கத்திடம் கேள்விமேல் கேள்வியெழுப்பிய போதிலும் அதற்கான உரிய பதிலை அரசாங்கம் தெரிவிக்கவில்லை. (2-4)

# யுத்தம் காரணமாக இந்து மதத்தவர்கள் வேறு மதங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்

## செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவிப்பு

நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தின் போது இந்து மதத்தவர்கள் பலர் வேறு மதங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நடாத்தப்பட்ட சிவதொண்டர் மாநாடு கடந்த 28ஆம் திகதி நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவத்திற்காக என்னென்ன செய்யவேண்டும் என நினைத்தாரோ அவற்றையெல்லாம் செய்து வருகிறது.

சிவதொண்டர்களை உருவாக்குவதற்காக நாவலர் பெருமான் சைவப் பிரசார வித்தியாலயங்களை நிறுவி சைவத்தை வளர்த்து வந்தார்.

இவ்வாறாக அகில இலங்கை இந்து மாமன்றமும் சைவப்பிரசார பயிற்சி நெறிகளை ஆரம்பித்து சைவத்தை வளர்த்து வருகிறது.

நாட்டின் சில மாவட்டங்களில் சைவ சமயம் சார்பாக நிகழ்வுகளில் உரையாற்றுவதற்கு சைவப் பெரியார்கள் இல்லாத நிலை தற்போதும் காணப்படுகிறது.

யுத்தம் இடம்பெற்ற காலங்களில் எமது மதத்தை சார்ந்தவர்கள்பலர் வறுமை காரணமாக வேறு மதங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். சைவசமயத்தை வளர்த்தெடுக்க இது போன்ற சைவசமயத்தின் பெருமையை உலக றியச் செய்யும் சிவதொண்டர் மாநாடுகள் இடம்பெறுவது அவசியமானது. இவ்வாறான மாநாடுகள் மூலம் எமது மதத்தவர்கள் வேறு மதங்களுக்கு மாற்றப் படுவ தைத் தடுக்கவேண்டும்.

அத்தகைய பணியில் சிவதொண்டர் அணி செயற்படும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

# மலையகப் பிரதேசங்களில் மண்சரிவு அபாயம்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை

(கொழும்பு)

மலையகப் பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் நிலவுவதாகவும் அப்பிரதேச மக்கள் விழிப்புடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் மேல் பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பமாகும் சூழ்நிலை உருவாகியுள்ளதால் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிலும் மண்சரிவுகள் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாக நிறுவனத்தின் மண்சரிவு ஆய்வு மற்றும் சேவைகள் பிரிவுத் தலைவர் ஆர். எம்.எஸ் பண்டார தெரிவித்தார்.

ஆகவே, இம்மாவட்டங்களின் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எதிர்வரும் நாட்களில் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த இரண்டு, மூன்று தினங்களில் பெய்த மழை காரணமாக கேகாலை மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 60 மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு ஏனைய மாவட்டங்களிலும் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இம் மண்சரிவு காரணமாக கேகாலை மாவட்டத்தில் மாத்திரம் நால்வர் உயிரிழந்துள்ளனர். (ஸ்ரீ-2)

# கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை

கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது பரீட்சை ஆணையாளரால் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடாத்தப்படவுள்ளது.


இச் சான்றிதழ் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மறைப்பாடசாலை ஒன்றில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று மறைப்பாடசாலையின் இறுதி நற்சான்று பத்திரவகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ.க) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது சிரேஷ்ட பாடசாலைச்சான்றுப் பத்திரப் பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ.க) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக் கல்வி பரீட்சையில் பதினோராம் தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் பரீட்சைஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை -பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 27.05.2011 இல் வெளியான வர்த்தகமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திற்கு நேரில் வந்தோ பார்வையிடலாம். (ஸ்ரீ-4)







வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த 24 ஆம் திகதி கம்பர் மலை கம்பன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலாமிடத்தைப் பெற்ற கம்பன் அணியினரையும் அவர்களுடன் விளையாட்டு இணைப்பாளர் வரதராஜன் மனோராஜ் மற்றும் நடுவர்களையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாலுசந்தி மைக்கல் அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)





ஏழாலை முத்தமிழ் மன்றமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய **கிராமத்து வாசனை** நிகழ்வு அண்மையில் ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் மன்றத் தலைவர் நா.இலட்சுமிகாந்தன், மன்றச் செயலாளர் க.மகாதேவன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## வித்தகபுரம் கிராம மக்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு அதிகார சபையின் வடமாகாண முகாமையாளரும் தொழில்நுட்பவியலாளர்களும் இன்று செவ்வாய்க்கிழமை காலை வித்தகபுரம் கிராம சேவகர் அலுவலகத்திற்கு வருகை தரவுள்ளனர்.

எனவே, விண்ணப்பித்தவர்களும் ஆலோசனை பெற விரும்புபவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு வித்தகபுர கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சிறிதாமோதரராசா கேட்டுள்ளார். (ஸ்ரீ)

## விளையாட்டுப் போட்டி

(தெல்லிப்பழை)

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையேயான ஆண்கள், பெண்களுக்கான கபடிப் போட்டியும் தனிநபர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் இன்று காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் ெபெறவுள்ளது. (ஸ்ரீ-53)

## அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள்

(அல்வாய்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு ஆண்டுதோறும் நடத்தும் அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியினை இவ்வாண்டும் நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கும் படைப்பாளர்களுக்கு இலக்கியக்கலை தொடர்பாக ஊக்கமளிக்கவும் மற்றும் அவர்களின் கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக இப்போட்டி வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்போட்டிக்கு சிறுகதை, சிறுவராக்கம், பாடலாக்கம், கவிதையாக்கம்,குறுநாடகம், ஓவியம் தொடர்பானஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. தமிழ்,சிங்கள மொழிமூலம் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறுகதைகள் ஆயிரத்து 500 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். பாடலாக்கம் (3 1/2) மூன்றரை நிமிடங்களிலும் பாடக்கூடிய பாடலுக்கு பொருத்தமான சொல்லமைப்பாக இருத்தல் வேண்டும். கவிதையாக்கம் ஆகக்கூடியது 10 செய்யுள் பகுதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். சிறுவராக்கம் சிறுவர் கதைப் புத்தகமொன்றை படங்களுடன்(10)பத்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு பொருத்தமான நம்பிக்கையுடன் கூடிய எண்ணங்களால் சிறுவர் மனதை மலர்விக்கும் வகையிலான உட்கருவுடன் எளிதான மொழிநடையில் (16) பதினாறு பக்கங்களுக்கு மேற்பட்டதாக படைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறுநாடகம் ஆகக்கூடியது (45) நாற்பத்தைந்துநிமிட கால வரையறையினை கொண்டிருத்தல் வேண்டும். கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் மேடையேற்றத்தக்க வகையில் எமது நாட்டுக் கலாசாரத்துக்கு தாக்கங்கள் எதுவும் ஏற்படாத படைப்பாக இருத்தல் வேண்டும். ஓவியம் **கலாசார ஒற்றுமை** எனும் தலைப்பின்கீழ் விரும்பிய மேற்பரப்பில் விரும்பியதை உபயோகித்து 18"×14" பரிமாணத்தில் வரையலாம்.

ஆக்கங்கள் அனைத்தும் ஜூலைமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர்,கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, 8ஆம் மாடி,செத்சிரிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

## இரண்டாம் தவணைப் பரீட்சை

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சையினை வலய மட்டத்தில் நடத்துதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய மாணவர்களின் விபரங்களை வகுப்பு,பாடரீதியாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## பௌர்ணமி தின விழா

(அல்வாய்)

வடக்கு மாகாணக் கல்வியமைச்சினால் மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் பௌர்ணமி தினவிழா ஜூலை மாதத்தில் வடமராட்சியில் நடத்தப்படவுள்ளது.

மாதாந்தம் வலய ரீதியாக இவ்விழா நடத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய ஜூலை மாதத்தில் இவ்விழாவினை வடமராட்சி கல்வி வலயத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலை அரங்கில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கல்வி வலய முன்னணிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-19)

## முத்திரை பொறிக்கப்படாத தராசுகளை பயன்படுத்தியோருக்கு அபராதம்

(கரவெட்டி)

சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் முத்திரை பொறிக்கப் படாத தராசுகளை பயன்படுத்தி விற்பனையிலீடுபட்ட 10 வர்த்தகர்களுக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 10 மாத சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் சம்பவ தினம் 10 வர்த்தக நிலையங்களில் யாழ்.மாவட்ட செயலக நிறுத்தலளவை அதிகாரிகளினால் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது முத்திரை பொறிக்கப்படாத தராசுகளை பயன்படுத்தி விற்பனையிலீடுபட்ட 10 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த தவணை 10 வர்த்தகர்களும் மன்றில் ஆஜராகாமையால் அவர்களுக்கு மன்றினால் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் குறித்த வர்த்தகர்கள் மன்றில் ஆஜராகினர்.

அவர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 10 பேருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத கால சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

## தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(நவாலி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் காரைநகர் பிரதேச பிரிவில் வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், கட்டட நிர்மாணம் ஆகிய தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த. சாதாரணம் வரை படித்தவர்களும் 17 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இப்பயிற்சி 6 மாத காலம் நடத்தப்படும். இதில் சித்தியடைந்தோருக்கு தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் விண்ணப்பங்களை பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்ற முகவரிக்கு எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-26)




## பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையிலான போட்டிகள்

(அல்வாய்)

நனோ தொழில்நுட்பத்தினூடாக புதுயுகம் என்ற தொனிப்பொருளில் அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே போட்டியினை நடத்தவுள்ளது. பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்களிடையே நனோ விஞ்ஞானத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாகவே இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

ஆசிரியர்களுக்கிடையே கதை, நாடகப் பிரதியாக்கம், கேலிச்சித்திரம், சுவரொட்டி, ஒலி, ஒளி வடிவங்களில் அமைந்த ஆக்கங்கள் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.தரம் 9,10,11 ஆகிய வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் பிரிவு-1 போட்டியிலும், தரம் 12, 13வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் பிரிவு-2 போட்டியிலும் பங்குபற்ற முடியும். இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கதை, நாடகப் பிரதியாக்கம், கேலிச்சித்திரம், சுவரொட்டி, ஒலி, ஒளி வடிவிலமைந்த ஆக்கங்கள் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மிகச்சிறந்த ஆக்கங்களுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களும் பாராட்டத்தக்க ஆக்கங்களுக்கு ஐந்து இடங்களும் வழங்கப்படவுள்ளன.

ஆக்கங்கள் அனைத்தையும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி குமாரி திலக்கரட்ண, இணைப்பதிகாரி,விஞ்ஞான செயற்றிட்டப்பிரிவு,அடிப்படைக் கற்கைநெறிகளுக்கான நிறுவனம், ஹந்தனை வீதி, கண்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

# கொழும்பில் மையம் கொள்ளும் இந்திய எதிர்ப்புணர்வு

## உள்ளூர் பேயா? வெளியூர் பிசாசா? நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை



கொழும்பு அரசியலில் ஐ.நாவின் அறிக்கை குறித்து இருந்து வந்த எதிர்ப்புணர்வு இப்போது இந்தியாவின் பக்கம் மெல்ல மெல்லத் திரும்பத் தொடங்கியுள்ளது. சிங்களத் தேசியவாதிகள் பலரும் இப்போது இந்தியாவுக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு முதலாவது காரணம் இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்தது போன்று இந்தியா நடந்து கொள்ளவில்லை என்பது. இரண்டாவது காரணம் இந்தியா கொடுக்கத் தொடங்கியுள்ள அழுத்தங்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இருந்துவந்த மிகநெருக்கமான உறவு இப்போது முக்கியமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது. அக்கினிப் பிரவேசத்தைக் கடக்க வேண்டியநிலை என்று சொன்னால் கூட அது மிகையில்லை.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம், இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் திருப்திகரமானதொன்றாக அமையவில்லை.

இந்தப் பயணத்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கு ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு காரணங்களைத்தேட முனைகின்றனர். சிலர் இதை வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் இயலாமை என்கின்றனர். இன்னும் சிலர் அவரது இராஜதந்திர பலவீனம் என்கின்றனர். ஆனால் இலங்கை அரசாங்கம் இந்தியாவை சரியாகக் கணக்குப் போடாததும் - இந்தியாவை மிகையாக நம்பியதும் தான் இந்த ஏமாற்றத்துக்குப் பிரதான காரணமாகக் கொள்ளலாம். அதாவது இலங்கை அரசாங்கம் சீனாவுடனான தனது நெருக்கத்தை வைத்துக் கொண்டு, இந்தியாவை தன் விருப்பப்படி வளைத்துப் போடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தது.

அதனால் தான், இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவுடன் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை சுலபமாகத் தோற்கடித்து விடலாம் என்ற கனவுடன் - நம்பிக்கையுடன் காத்திருந்தது.

அது தொடர்பான இந்தியாவின் வாக்குறுதியுடன் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வந்துசேர்வார் என்று எதிர்பார்த்திருந்தது. ஆனால் அவரோ இந்தியா கொடுத்து அனுப்பிய - நிறைவேற்ற வேண்டிய கட்டளைகளுடன் தான் கொழும்பு வந்து சேர்ந்தார். இதுதான் கொழும்பு அரசியலில் இந்திய எதிர்ப்புணர்வு மீண்டும் தோற்றம் பெறக் காரணம். ஐ.நா அறிக்கை வெளியாகி பல வாரங்களாகியும் இந்தியாவின் பக்கத்தில் இருந்து எந்தக்கருத்தும் வராத நிலையில் தான், வெளிவிவகார அமைச்சரை அரசாங்கம் புதுடெல்லிக்கு அனுப்பியது. அதுமட்டுமன்றி இந்தியக் குழு கொழும்பு வரவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான மூவர் அணி புதுடெல்லி செல்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இரண்டுமே நடக்காத நிலையில் தான் - வெளிவிவகார அமைச்சர் பீரிஸை, தனியாக அழைத்து விபரங்களை கூறி அனுப்பியுள்ளது இந்தியா. பீரிஸின் பயணத்தின் முடிவில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் ஐ.நா. அறிக்கை பற்றிய ஒரு சொல் கூடக் கிடையாது. ஆனால் அதுபற்றியே நீண்டநேரம் பேசப்பட்டுள்ளது. இலங்கை எதிர்பார்த்தது போன்று இந்தியா, ஐ.நா. அறிக்கையை உடனடியாக எதிர்க்கவோ அல்லது இலங்கை அரசுக்காக பரிந்து பேசவோ தயாராக இல்லை. இது சிங்களத் தேசியவாதிகளை கடும் சினத்துக்குள்ளாக்கியுள்ளது.

குணதாச அமரசேகர, கோமின் தயாசிறிபோன்ற பலருக்கும் இந்தியாவின் அணுகுமுறை கடுமையான ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. இதனால் தான் அவர்கள் இந்தியாவின் மீது எரிந்து விழத் தொடங்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்தியாவுடன் கூட்டறிக்கையில் கையெழுத்திட்ட வெளிவிவகார அமைச்சர் பீரிஸையும் கடுமையாகச் சாடத் தொடங்கியுள்ளனர். அவர் தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் கூட குற்றம் சாட்டியுள்ளனர் இவர்கள்.

வரும் நாட்களில் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் இந்தியாவுக்கு எதிரான பேரணிகளையும், கருத்தரங்குகளையும் நடத்தப் போவதாக எச்சரித்துள்ளார் குணதாச அமரசேகர. ஜேவிபியும் இதுபோன்ற எச்சரிக்கையை விடுத்துள்ளது. மீண்டும் ஓர் இந்திய எதிர்ப்புணர்வு கொழும்பில் மையங்கொள்ளத் தொடங்கியுள்ளது.

இதற்குப் பின்னால் அரசாங்க தரப்பின் ஆதரவும் இருக்கலாம் என்பதற்கான சந்தேகங்களும் வலுவாகவே உள்ளன. காரணம், அரசாங்கத்துக்குக் கூட இந்தியாவின் அணுகுமுறை பிடிக்கவில்லை. ஆனால் அதை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. கூட்டறிக்கையில் இந்தியா அழுத்தம் கொடுத்தது போன்று காட்டிக் கொள்ளாமல் - மிகவும் நாசூக்கான முறையில் வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றை நீக்க வேண்டியது பற்றிய குறிப்புகள் இந்தியாவின் கருத்தாக கூட்டறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால் 13ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரப்பகிர்வு பற்றிய கருத்துகள் இந்தியாவின் பக்கத்தில் இருந்து கூறப்படவில்லை. அதை வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் கருத்தாகவே இணங்கப்பட்டுள்ளது.

ஆக, இலங்கை அரசின் வாயினாலேயே 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்வு பற்றி இந்தியா கூற வைத்துள்ளது. இது பற்றி கூட்டறிக்கையிலும் கையெழுத்திட்டு விட்டு வந்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ். இதுதான் மிகவும் முக்கியமான பிரச்சினை. இலங்கை அரசாங்கம் இப்போது கூட்டறிக்கை என்றாலே பெரும் சிக்கலாக மாறி வருகிறது.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் கொழும்பு வந்திருந்தபோது இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையின் படியே நிபுணர் குழுவை அமைத்ததாக கூறியிருந்தார். இப்போது இந்தியா இந்தக் கூட்டறிக்கையை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறதென்று தெரியவில்லை. ஆனால் இந்தமுறை இந்தியா வலுவானதொரு பிடிக்குள் இலங்கையைக் கொண்டு வந்துள்ளது என்பதே உண்மை.

கடந்த காலங்களில் சீனாவுடனான ஆதிக்கப் போட்டியில் இந்தியா பல சறுக்கல்களைச் சந்திக்க நேரிட்டது. ஆனால் இந்த முறை இந்தியாவின் வலுவான பிடிக்குள் இலங்கை மாட்டிக்கொண்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய பல காரியங்களை பட்டியல் போட்டு அனுப்பியுள்ளது இந்தியா. அவற்றில் இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்பட்டிருந்த தடைகளை அகற்றுதலும் ஒன்று. இந்தியாவைச் சமாளிக்கும் ஓர் உத்தியாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் இந்தியப் பயணத்துக்கு முன்னரே, காங்கேசன் துறைத் துறைமுகத்தைப் புனரமைக்கும் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

ஆனால், இந்தியாவோ இலங்கை அரசாங்கம் இழுத்தடிக்கும் சம்பூர் அனல் மின்திட்டம் உள்ளிட்ட எல்லாத் திட்டங்களையும் விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான தடைகளை அகற்றக் கோருகிறது.

இவையெல்லாம் இலங்கை அரசுக்கு கடும் நெருக்கடியாக உள்ளன. இந்தியா கூறியுள்ள மறைமுக நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் அல்லது நடைமுறைப்படுத்தினால் தான் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையை முறியடிப்பதற்கான ஆதரவை இந்தியா வழங்கும்.

அதேவேளை கூட்டறிக்கையில் மற்றொரு விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் பற்றிய நீதியான விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதே அது. மனிதஉரிமை மீறல்கள் என்று பேசினால் இங்குள்ள அரசியல் தலைவர்களுக்கு கடுமையான கோபம் வந்துவிடும். இங்கேயும் அது தான் நடந்திருக்கிறது.

இந்தியப்படைகள் இங்கிருந்த காலத்தில் செய்த மனிதஉரிமை மீறல்களையெல்லாம் மறந்து விட்டு - மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்குமாறு கோரும் தகைமை இந்தியாவுக்கு உள்ளதா என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இவைதான் இந்தியாவுக்கு எதிரான உணர்வு - அல்லது இந்திய விரோதப்போக்கு கொழும்பில் தற்போது முளைவிடக் காரணம்.

இந்தியா தனது அணியை கொழும்புக்கு அனுப்பாமலேயே இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கி விட்டது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? இந்தியாவின் சொற்படி நடக்கலாம் அல்லது அதன்பேச்சை மீறிச்செயற்படலாம். இந்தியாவில் சொற்படி நடப்பதானால், அதற்காக அதிகாரப்பகிர்வு அரசியல் தீர்வு போன்ற சிக்கலான காரியங்களை நிறைவேற்றியாக வேண்டும். இதைச்செய்யப்போனால், பெரும் சிக்கலுக்குள் அரசாங்கம் மாட்டிக் கொள்ளும்.

என்னதான் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசிக்கொண்டிருந்தாலும் அதிகாரப்பகிர்வுக்கு அரசு தயாராகிவிட்டது என்று தெரியவந்தால் சிங்களத் தேசிய வாதிகள் சும்மா இருக்கப்போவதில்லை. எனவே அதை நிறைவேற்றுவதற்கு பல தடைகளைத் தாண்ட வேண்டும். இல்லையேல் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள வேண்டும்.

அப்படிப்பகைத்துக் கொண்டால், அதன் விளைவு ஐ.நா வரை கூட இலங்கை அரசை கொண்டுபோய் நிறுத்தி விடக்கூடும். இதனால் இலங்கை அரசு மெல்ல மெல்ல சிங்கள தேசியவாத சக்திகளை உசுப்பி விடத் தொடங்கலாம். இந்தியாவின் அழுத்தங்களை சிங்களமக்கள் எதிர்க்கின்றார்கள். இந்தியாவிற்கு அடிபணிந்தால் நாட்டில் மீண்டும் கிளர்சிகள் உருவாகும் என்றெல்லாம் ஒரு பிரமையை ஏற்படுத்த அரசாங்கம் முனையலாம்.

அதையெல்லாம் இந்தியா அவ்வளவு சுலபமாக நம்பி விடும் என்றும் கூறமுடியாது. எனவே, இப்போது இந்தியாவுக்கு வளைந்து கொடுத்தாலும் சரி, அல்லது அதனுடன் முரண்பட்டாலும் சரி இலங்கை அரசுக்கு அழுத்தங்களும் நெருக்கடிகளும் அதிகரிக்கப்போகிறதே தவிர குறையப் போவதில்லை.

இந்தியா கூறுவதைச் செய்தால் உள்நாட்டில் நெருக்கடிகள் வலுக்கும். இந்தியா கூறுவதைச் செய்யாது போனால் வெளிநாடுகளில் நெருக்கடிகள் வலுக்கும். உள்ளூர் பேயா- வெளியூர் பிசாசா? எதைத் தெரிவு செய்வதென்று தெரியாத நிலையில் தான் இலங்கை அரசாங்கம் சிக்கியுள்ளது. இந்த சிக்கலில் இருந்து இலங்கை அரசு அவ்வளவு சுலபமாக விடுபட்டு விடமுடியாது. ஏனென்றால் இப்போது நிலைமைகள் கையை மீறிச் சென்றுவிட்டன.

கே.சஞ்சயன்

# நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உடற்பயிற்சியும் யோகாசனமும்

சுலப நடை

உடற்பயிற்சிகளில் மிக சுலபமானது, எல்லோருக்கும் ஏற்றது நடத்தல். இதற்கு சிறப்புப் பயிற்சிகள் எதுவும் தேவையில்லை. சுத்தமான காலுறை மற்றும் காலணி இருந்தால் போதுமானது.

தினமும் சுமார் 30 நிமிடங்கள் நடந்தாலே இன்சுலின் கட்டுப்பாடிற்குள் வந்துவிடும். இரத்த சீனி அளவு கட்டுப்பாட்டில் இருக்கும் என்கிறன ஆய்வுகள்.

நீண்டகாலமாக நீரிழிவு வியாதியாய் இருந்து அதனால் கால்கள் மரத்துப் போகும் நிலை உள்ளவர்கள் நீண்ட தூரம் நடக்கக்கூடாது.

அடுத்தடுத்து பயிற்சிக்காக நடப்பதால் கால்கள் மேலும் மரத்துப் போகவும், கால்களில் புண்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன.

புண்கள் ஏற்பட்டவர்கள் குதிப்பது, மெல்லோட்டம், இறுக்கமாக காலுறை அல்லது காலணி அணிந்து ஓடுதல் போன்றவற்றில் ஈடுபட்டால் பாதிப்புக்கள் தீவிரமாகலாம்.

ஆகவே நீச்சல், கை கால்களை அசைத்து செய்யும் ஏரோபிக் பயிற்சிகள் , சைக்கிள் ஓட்டுதல் போன்று கால்களுக்கு அதிக பழு தராத பயிற்சிகளில் ஈடுபடலாம்.

ஒவ்வொரு முறை பயிற்சியை ஆரம்பிக்கும் முன்பும் வோர்ம் - அப் பயிற்சி எனப்படும் உடல் தளர்வுப் பயிற்சியை செய்ய வேண்டும். அதன் பின்பே பயிற்சியில் ஈடுபடுதல் வேண்டும்.

ஏரோபிக் பயிற்சி அல்லது வேறு எந்தப் பயிற்சிகளில் ஈடுபட்டாலும் ஐந்து முதல் பத்து நிமிடத்திற்கு வோர்ம்-அப்பயிற்சிகள் அவசியமாகும். இதனால் இதயம், நுரையீரல்கள் மற்றும் தசைகள் ஆகியவை பயிற்சிக்குத் தயாராகும்.

ஆரம்பத்தில் குறைந்த தூரம் மட்டுமே நடத்தல், ஓடுதல் போன்றவற்றில் ஈடுபட்டு இதயம் அதிகமாக படபடக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சியை முடிக்கும் போதே இதயம் வேகமாக துடிப்பதும் கட்டுப்பட வேண்டும். தசைகள் இறுக்கமாவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

*கை கால்களை நீட்டும் பயிற்சிகள்*


கை கால்களை நீட்டி மடக்கும் பயிற்சிகள் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. இது மூட்டுக்களையும் தசைகளையும் தசைநார்களையும் நீட்டவும் மடக்கவும்ஏற்ற திறனை மிகைப்படுத்துவதோடு மூட்டுக்களில் வலி மற்றும் காயங்கள் ஏற்படுவதையும் தடுக்கிறது.

நீட்டி மடக்கும் சில உடற்பயிற்சி முறைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

*கெண்டைக்கால் தசைகளை நீட்டி மடக்குதல்*


கையை நீட்டித் தொடும் அளவுக்கு ஒரு சுவரின் முன்னால் நின்று கொள்ளுங்கள்.

ஒரு காலை முன்னால் வைத்து உங்கள்






**02**



உடம்மை சுவரை நோக்கி சாயுங்கள்.

இவ்வாறு செய்யும் போது தானாகவே ஒரு காலின் முட்டி முன்னோக்கி வளையும் . இன்னொரு முட்டி நேராக இருக்கும்.

முதுகை நேராக வைத்துக் கொண்டு இடுப்பை சுவர் உள்ள பக்கமாக முன்னோக்கி சாயுங்கள். இந்த நிலையில் முப்பது விநாடிகள் இருந்துவிட்டு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புங்கள்.

இவ்வாறே அடுத்த காலை மாற்றி செய்யுங்கள். தினமும் இந்தப் பயிற்சியை ஐந்து அல்லது பத்து முறை செய்தாலே போதும்.

*கீழ் முதுகு இழுப்பது போன்ற பயிற்சி*

ஒரு நாற்காலி அல்லது மேசையின் மீது படுத்துக் கொண்டு உங்கள் இடுப்பு மற்றும் முழங்கால்களை மடக்கி மேலே உயர்த்துங்கள்.

ஒரு முட்டியை இரண்டு கைகளாலும் பிடித்து உங்கள் தோல் பட்டையை நோக்கி பின்னுக்கு இழுங்கள்.

இவ்வாறு இழுத்த நிலையில் முப்பது நிமிடங்கள் இருங்கள். பின்னர் உடலை தளர்த்துங்கள். மறுமுறை வேறு காலை மாற்றிக் கொள்ளுங்கள். ஐந்து முதல் பத்து முறைவரை இந்தப் பயிற்சி செய்யுங்கள்.

**பேராசிரியர்**
**டாக்டர் டி.காமராஜ் ,**
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
**சென்னை.**


*மார்பை இழுப்பது போன்ற பயிற்சி*

கைகள் இரண்டையும் கோர்த்தவாறு பிடரியில் வைத்துக் கொள்ளவும். வேகமாக மூச்சை இழுந்த்து விட்டபடி முழங்கைகளை அப்படியே மேலுக்கு உயர்த்த வேண்டும். இதே நிலையில் முப்பது நிமிடங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும். (தொடரும்)

# தைரொய்ட் பிரச்சினை



**02**



*தைரொய்ட் பாதிப்பிற்கு என்ன மாதிரியான சிகிச்சைகளைச் செய்கிறீர்கள்?*

குறை தைரொய்ட் (ஹைபோ) பிரச்சினைக்கு பரிசோதனை முடிவைப் பார்த்து மருந்து மாத்திரை மூலமாகவே குணப்படுத்தி விடலாம். எந்த நிலையிலும் இதற்கு இதுதான் சிகிச்சை. அதிக தைரொய்ட் (ஹைபர்) பிரச்சினைக்கு 3 வகையான சிகிச்சைகள் உள்ளன.

மருந்து மாத்திரைகள் மூலமாகக் குணப்படுத்துவது, அணுக்கதிர் தன்மை கொண்ட சொட்டு மருந்து, அறுவைச் சிகிச்சை.

தைரொய்ட் அதிகமாகச்சுரக்கின்ற நோயாளிக்கு மருந்து மாத்திரையே நிரந்தரத் தீர்வாக அமையாது. 6 முதல் 12 மாதம் வரை மருந்து சாப்பிட்டுப் பார்த்துக் குணமாகவில்லை என்றால் அணுத் தன்மை உள்ள சொட்டு மருந்தோ அல்லது அறுவைச்சிகிச்சையோ செய்து குணப்படுத்தி விடலாம்.

*அணுக்கதிர் சொட்டு மருந்து சிகிச்சை பற்றிச் சொல்லுங்களேன்?*

இன்று வேகமாக வளர்ந்து வரும் அணுக்கதிர் மருத்துவத்தில் இத்தகைய தைரொய்ட் பாதிப்புக்களைக் கண்டு பிடிப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் ஐசோடோப் எனப்படும் அணுக்கதிர் மருந்து உபயோகிக்கப்படுகின்றது. கதிர் இயக்கத் தன்மை உடைய இந்த மருந்து நோயாளிக்கு வாய்வழியாகவோ அல்லது ஊசி வழியாகவோ செலுத்தப்படும். உடலில் எல்லா உறுப்புக்களிலும் ஏற்படும் புற்று நோய்களையும் குறிப்பாக மூளை, கல்லீரல், சிறுநீரகம், தைரொய்ட் ஆகியவற்றில் ஏற்படும் புற்று நோய்களை கண்டுபிடிக்க முடியும்.

கழுத்தில் ஏதேனும் கட்டி இருந்தால் குழந்தைகள் படிப்பிலும், வளர்ச்சியிலும் மந்தமாக காணப்பட்டால், சுரப்பிகளில் குறைபாடு உள்ளது என்று அர்த்தம். இதனை போக்குவதற்கு தைரொய்ட் சுரப்பி பரிசோதனை செய்து மருத்துவ சிகிச்சைகள் பெற வேண்டியது மிக முக்கியமாகும்.

இந்த அணுக்கதிர் சொட்டு மருந்து சிகிச்சையினைப் பெற்ற நோயாளி அன்றைக்கே வீட்டுக்குப் போய் விடலாம். மருத்துவமனையில் தங்கவேண்டியதோ, இரத்த இழப்போ, எதுவும் இருக்காது. நோகாமல் தைரொய்ட் நோயை அகற்றுகின்ற அற்புதமான அதிநவீன மருத்துவம் தான் இந்த அணுக்கதிர்ச் சொட்டு மருந்து சிகிச்சையாகும்.

*சில குழந்தைகள் மந்தமாக இருப்பதற்கு தைரொய்ட் பாதிப்பு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறதே உண்மையா?*

பெரும்பாலும் குழந்தைகளுக்கு தைரொய்ட் சுரப்பி குறைவாக சுரக்கின்ற பாதிப்புத் தான் வரும். பொதுவாக தாயின் வயிற்றில் கரு உண்டானதிலிருந்து பிறந்து 3 வயது வரைக்கும் மூளை வளர்ச்சியின் வேகம் அதிகமாகவே இருக்கும். இந்த மூளை வளர்ச்சி நிலையில் குறைபாடு தைரொய்ட் ( ஹைபோ) இருந்து அதனைக் கண்டு கொள்ளாமல் எந்தவிதமான சிகிச்சையும் எடுக்காமல் விட்டுவிட்டால் குழந்தையின் அறிவுத் திறன், அறிவு நுட்பம்(ஐக்யூ) குறைந்து விடும். படிப்பு, நடப்பது, பேசுவது, எழுதுவது, நடை உடை பாவனை அனைத்திலும் அந்த குழந்தை மிகமிக மந்தமாகி விடும். இதுபோன்று ஒரு குழந்தை மந்தநிலையில் இருந்தால் தைரொய்ட் ஓமோன் இரத்தப் பரிசோதனை செய்தால் தெரிந்துவிடும்.

அப்போதே அலட்சியப்படுத்தாமல் குழந்தைக்கு சிகிச்சை அளித்தால் பூரணமாக குணப்படுத்தி மந்தநிலையை போக்கி விடலாம்.

*தைரொய்ட்டில் புற்றுநோய் வருமா?*

தைரொய்ட் சுரப்பியிலே புற்று நோய் வர வாய்ப்புள்ளது. இதில் பல வகைகள் உள்ளன. தைரொய்ட் புற்றுநோயின் அறிகுறிகள்:

1.தைரொய்ட் சுரப்பி வீங்கி விடும்

2.குரலில் மாற்றம் ஏற்படும்

3.கழுத்துப் புறங்களில் சின்னசின்ன வீக்கமாக ஏற்படும்.

4.தைரொய்ட் பாதிப்புக்குச் சிகிச்சை எடுத்தும் குணமாகாமல்இருப்பதுபோன்றவைஆகும்.

பெரும்பான்மையான தைரொய்ட் புற்றுநோயை சத்திரசிகிச்சைக்கு பின்னர் அணுக்கதிர்ச் சொட்டு மருந்தினை கொடுத்தே குணப்படுத்திவிடலாம். மேலும் சில வகை யான

**தைரொய்ட் நிபுணர்**
**ஆர்.ராம்குமார்**
**MBBS, DRM., சென்னை-2**

தைரொய்ட் புற்றுநோய் உடம்பில் பரவி இருந்தாலும், இந்த சொட்டு மருந்தினை கொடுத்து கண்டுபிடித்து குணப்படுத்தி விடலாம்.

(முற்றும்)

# இலங்கையை உலுப்பிவரும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

**4. வலுக்கட்டாயமாகக் குழந்தைகளை ஆட்சேர்த்தல்**

240. குழந்தைகளை வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பது மீதான தடை: குழந்தைகளை வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடை செய்கிறது.

வயது எல்லை பற்றிய சர்ச்சை இருந்தபோதிலும், குறைந்தபட்சம் அவ்வயது 15 என அரசாங்கங்கள் இணங்கியுள்ளன. (விதி 136,



ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) குறிப்பாக யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் 14வயதுச் சிறுவர்கள் மற்றும் சிறுமியரைக்கூட எல்.ரி.ரி.ஈ. வலுக்கட்டாயமாக அணி திரட்டியதன் மூலம் இவ்வேறுபாட்டை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. இறுதியுத்தத்தின் போது, மரணிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கும் போது, இப்படியான வலுக்கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் இளவயதினரைத் தம் குடும்பங்களிலிருந்து பிரிப்பதும் கொடூரமாக நடாத்துவதான பொது உறுப்புரை 3 இனை மீறுவதாகும்.

**5. வலுக்கட்டாய உழைப்பு**

241. வலுக்கட்டாய உழைப்பு மீதான தடை: ஈடுசெய்யமுடியாத அல்லது துஷ்பிரயோகமான வலுக்கட்டாய உழைப்பை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தடை செய்கிறது.(விதி95, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) சில சமயம் ஆபத்தான சூழ்நிலைகளில் மற்றும் அநேகமாக தம் குடும்பங்களில் இருந்து பிரிக்

**தமிழாக்கம் தொடர் 30**

கப்பட்டு அரண்களை அமைப்பதற்காகவும் யுத்தமுயற்சிக்கு வேறு பங்களிப்புக்களை வழங்குவதற்காகவும் பல பொதுமக்களை எல்.ரி.ரி.ஈ. வலுக்கட்டாயமாக அணிசேர்த்த மீறல் பற்றி நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

யுத்தத்தின் கடைசி கட்டங்கள் போன்ற உயிருக்கு ஆபத்து அல்லது உடம்புக்கு ஆபத்து ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ள நிலைமைகளில் இவ்வழக்கம் கொடூரமாக நடத்துவதான, பொது உறுப்புரை 3இனை மீறுவதாகும்

**(83) 6. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களை கொலை செய்தல்**

242. ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3: பொது மக்களுக்கு எதிராக யுத்தவலயத்திற்குள்ளும் வெளியேயும் பல தற்கொலைக் குண்டுதாக்குதல்களை எல்.ரி.ரி.ஈ. மேற்கொண்டுள்ளதாக நம்பகமான குற்றச்சாட்டுகள் பொது உறுப்புரை 3 (கொலை) இனை மீறியதைக் குறிக்கின்றது.

2009 பெப்ரவரி 9 ஆம் திகதி முல்லைத் தீவைப் பிரிக்கும் மத்தியொன்றில் அல்லது 2009 மார்ச் 10 ஆம் திகதி அமைச்சர் மஹிந்த விஜேசேகர மீதான தாக்குதல் போன்ற பொதுமக்கள் பலரைக் கொன்ற தாக்குதல்கள் உள்ளிட்ட பல தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை யுத்தத்தின்இறுதிக் கட்டங்களில் யுத்தவலயத்திற்கு வெளியே எல்.ரி.ரி.ஈ. மேற்கொண்டது.

மேலே ஆராயப்பட்ட பொது மக்கள் மீதான வேண்டுமென்றோ அல்லது கண்மூடித்தனமாகவோ மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இத்தடையின் தெளிவான மீறலெனக் குழு கருதுகிறது. தற்கொலைத் தாக்குதல்கள் எல்.ரி.ரி.ஈ. அதன் காலம் பூராகவும் மேற்கொண்டதொரு பொதுவான நடவடிக்கையாகும் என்பதோடு தற்கொலைத் தாக்குதல்கள் பற்றிய அச்சம் அரசாங்கத்தின் மீறல்களுக்கான பங்களிப்பை செய்யவில்லை மற்றும் அதனை நியாயப்படுத்த முடியாது.

243. இறுதியாக, நாடுசாராத பாத்திரங்களின் மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் தொடர்பான குழுவின் கருத்தின் அடிப்படையில் மேலே (அ) 2 இனைப் பார்க்கவும்) சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் என அது குறிப்பிட்டவற்றை விஞ்சிய மனித உரிமைகள் மீறல்களை குழு கவனத்துக்கெடுத்துக்கொள்ளவில்லை.

தம் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அப்பால், நாடு சாராத பாத்திரங்களுக்கு மனித உரிமைகள் பற்றிய கடப்பாடுகள் உண்டா என்பதை சூழவுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக யுத்தவலயத்திற்கு வெளியே எல்.ரி.ரி.ஈ. இன் துஷ்பிரயோகங்களை குழு கவனத்துக் கெடுத்துக்கொள்ளவில்லை.

தம் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அப்பால், நாடு சாராத பாத்திரங்களுக்கு மனித உரிமைகள் பற்றிய கடப்பாடுகள் உண்டா என்பதை சூழவுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக யுத்தவலயத்திற்கு வெளியே எல்.ரி.ரி.ஈ. இன் துஷ்பிரயோகங்களை குழு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

**(ஊ) சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றத்திற்கான தனிநபர் பொறுப்பு**

244. மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட பல சர்வதேச மனிதபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் சர்வதேச சட்டத்தின்கீழ் தனிநபர் பொறுப்பினைக் கொண்டுள்ளன. ஆயுதந்தரித்த மோதலில் சம்பந்தப்பட்ட எந்தவொரு சாராரினதும் குறிப்பிட்டதொரு தனிநபர் பொறுப்புப்பற்றிக் கவனம் செலுத்துவது குழுவின்ஆணையல்ல கீழே உள்ள தீர்மானங்கள், நம்பகமான குற்றச்சாட்டுக்கள், நிரூபிக்கப்படின் சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக இருக்குமா என்பதைக் குறிப்பிடுவதற்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட குற்றச் செயலுக்குப் பொறுப்பான நபர்களை இணங்காண்பதற்காக மற்றும் அச் சந்தர்ப்பத்தில் அவர்களது மனோ நிலையை மதிப்பீடு செய்வதற்கு மேலும் புலனாய்வு தேவைப்படும்.

(84) 245. இலங்கை தரப்பினரான உடன்படிக்கைகளில் விளக்கப்பட்ட குற்றங்கள் அல்லது மரபுவழக்கான சர்வதேச சட்டத்தின்கீழான குற்றங்கள் ஆகியவற்றுக்கு குழு அதன் கவனத்தை மட்டுப்படுத்தி, நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குற்றம் ஒன்றை நடத்துவதைக் குறிக்கின்றதா என்ற பகுப்பாய்வில் கவனம் செலுத்துகிறது. முன்புபோல், மிகவும் பாரதூரமான குற்றங்களை மாத்திரமே குழு கலந்துரையாடுகிறது.

பின்னால் இவ்வறிக்கையில், இலங்கை மீது அவை சுமத்தும் கடமைகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட செயல்களின் பின் விளைவுகளை மற்றும் ஏனைய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான பங்கினையும் அது கவனத்துக் கெடுத்துக்கொள்கிறது.

**1.போர் குற்றங்கள்**

246.சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் சில ஆனால் எல்லாவற்றையும் உள்ளடக்காத மீறல்களுக்கு தனிநபர் குற்றப் பொறுப்புக்கான ஏற்பாட்டினைச் .சர்வதேச சட்டம் வழங்குகிறது. உள்நாட்டு ஆயதந்தரித்த மோதல்களின் போதான அத்தகைய மீறல்களை ஜெனீவா உடன்படிக்கைகள் வசைப்படுத்தவோ அல்லது விளக் கமளிக்கவோ இல்லை என்ற போதிலும், ஏனைய அதிகார பூர்வமான சர்வதேச சட்ட மூலங்கள் இக்குற்றங்கள் பற்றி விளக்கியுள்ளதோடு அவற்றின் குற்றத்தன்மை இப்போது சந்தேசத்திற்கிடமற்றதாகவுள்ளது. சர்வதேகுற்றவியல் நிதிமன்றத்தின் ரோம் சட்டம், குறிப்பாக உறுப்புரைகள் 8 (2) (இ) மற்றும் 3 இது தொடர்பில் கவனிக்கத்தக்கதாகும்.

அச்சட்டத்திற்கு இலங்கை ஒரு தரப்பினராக இல்லாத போதிலும், சர்வதேசம் சாராத யுத்தங்களின் போர்குற்றங்களின் பட்டியல் மற்றும் விளக்கங்கள் மரபுவழக்கான சர்வதேச சட்டத்தினை துல்லியமாகப் பிரதிபலிக்காவிட்டாலும் பொதுவாக அதனை எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக தெளிவாக்குவதாகவுள்ளது.

ஐ.சி.ஆர்.சி.இன் மரபு வழக்கான சட்டத்தின் விரிவான ஆய்வின் மீதும் குழு சார்ந்திருக்கிறது.

247. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் செயற்படும் நபர்கள் பின்வரும் போர்குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் மற்றும் மீறல்களை எடுத்தியம்புவதாக குழு நம்புகின்றது.

(அ) குறிப்பாக சகல விதமான கொலைகள், உருக்குலைத்தல், கற்பழித்தலை உள்ளிட்ட கொடூரமாக நடாத்துதல், காயமடைந்தோரையும் நோயாளிகளையும் சேகரித்துப் பராமரிக்கத் தவறியமை ஆகியவற்றை உள்ளிட்ட பொது உறுப்புரை 3 இன் பாரிய மீறல்கள்

(ஆ) வேண்டுமென்றே பொது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் (இ) கண்மூடித்தனமான அல்லது ஒவ்வாத தன்மையுடைய பொது மக்கள் மீதான தாக்குதல்கள்

(ஈ) மனிதாபிமான வாகனத் தொடர்கள் மற்றும் செஞ்சிலுவை குறித்துரைத்த வசதிகள் ஆகியவற்றை உள்ளிட்ட மருத்துவ மற்றும் மனிதாபிமானத் தலங்கள் மீதான தாக்குதல்கள்



(உ) மக்களை பட்டினியில் வைத்தல் மற்றும் மனிதாபிமான நிவாரணத்தை மறுத்தல் மற்றும்

(ஊ) வலுக் கட்டாயமாகக் காணாமல் போதல்கள்

(85)248. எல்.ரி.ரி.ஈ. இன் சார்பில் செயற்படும் நபர்கள் பின்வரும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் மற்றும் மீறல்கள் எடுத்தியம்புவதாக குழு நம்புகிறது: (அ) உயிருக்கும் உடலுக்குமான வன்முறைகள் உள்ளிட்ட குறிப்பாக சகல விதமான கொலைகள், உருக்குலைதல், கொடூரமாக நடாத்துதல் (கட்டாயப்பணி உட்பட) மற்றும் சித்திரவதை அத்துடன்பணயக் கைதிகளைப் பிடித்தல் போன்ற பொது உறுப்புரை 3 இன் பாரிய மீறல்கள், மற்றும்

(ஆ) வலுக்கட்டாயமாக குழந்தைகளை ஆட்சேர்த்தல். *(தொடரும்)*

# யுத்தம் முடிவுறுத்தப்பட்ட நிலையிலும் பொருளாதாரத்தில் பாரிய சவால்கள்

## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

தூர நோக்கற்ற கொள்கைகள் மற்றும் அரசியல் தலையீடு காரணமாக நாட்டுக்கு பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

அந்தச் சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யுத்தம் முடிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் பொருளாதார ரீதியில் பாரிய சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கோஷி மாத்தியுடன் மீண்டும் ஒரு சந்திப்பு நடத்தப்படவுள்ளதாக ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிப்படைத் தன்மையற்ற வகையில் அரச நிறுவனங்களை அரசாங்கம் தனியார் மயப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் முக்கிய துறைகளில் அரசியல் தலையீடு காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலீட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என குற்றம் சுமத்தியுள்ளார். (2-4)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி சுகாதார மையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி நாற்சந்தி யிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் காலை 11 மணிவரை ஆடிய பாதம் வீதி முத்தமிழ் முன்பள்ளியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை ராணாவீதி சுகாதார மையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (2)

# இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளிடம் வாக்குமூல பதிவு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது களநிலைகளில் முன்னின்று பணியாற்றிய இராணுவ அதிகாரிகளிடம் வாக்குமூலங்களை பதிவு செய்து இராணுவ அறிக்கையொன்று தயாரித்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தின் இந்த அறிக்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முறியடிப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று இறுதிக்கட்டப் போரில் பங்கேற்ற முக்கிய இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட படைத் தளபதிகளை உள்ளடக்கிய இந்தக் குழு அறிக்கை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

இந்த அறிக்கை போர் முனையில் பணியாற்றிய இராணுவ அதிகாரிகளின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். அத்துடன் விடுதலைப்புலிகளின் பிடியில் இருந்து பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகள் பற்றிய அனுபவங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

51, 53, 55, 57, 58, 59 ஆவது டிவிசன்கள் மற்றும் அவற்றுக்குத் துணையாக செயற்பட்ட சிறப்புப் படைப்பிரிவின் அணிகள், கொமாண்டோ உப குழுக்கள், சிறப்பு அதிரடிப்படை ஆகியவற்றினது போர் முனைத் தளபதிகள் மற்றும் கட்டளை அதிகாரிகளிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்யவுள்ளதாக உயர் இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை, இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பல இராணுவ அதிகாரிகளிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (2-4)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவச கொப்பிகள் வழங்கினார்-அனோமா

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமை நிலையில் இருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு அனோமா பொன்சேகா இலவச கொப்பிகளை விநியோகித்துள்ளார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் இளைஞர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரஸ்தாப வைபவத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா மற்றும் அவர்களின் இளைய மகள் அபர்ணா பொன்சேகா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமை நிலையில் இருக்கும் மாணவர்களுக்கான நலனோம்புகை செயற்றிட்டங்களை எதிர்காலத்திலும் தனது கணவனின் கட்சியூடாக தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக அவர் அங்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

தனது கணவன் முன்னெடுத்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கு அனோமா பொன்சேகாவின் இலவசக் கொப்பிகள் வழங்கும் செயற்றிட்டம் வெறும் கண்துடைப்பு நடவடிக்கை என்றும் அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் அவர்களைத் தண்டிப்பதை தடுத்துவிட முடியாது என்றும் பிரதேச மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (2-4)

# கிழக்கில் பாரிய வேலைத்திட்டத்திற்கு பத்தாயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கீடு

பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக கிழக்கு மாகாணத்தின் 10 ஆயிரம் ஏக்கர் காணிப்பரப்பு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கு சொந்தமான கைவிடப்பட்ட காணிகளில் இருந்து இவை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நட்சத்திர விடுதிகள், கைத்தொழிற்சாலைகள் மற்றும் விவசாய வேலைத்திட்டங்களுக்காக இந்தக் காணி பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கிடையில் இந்த வேலைத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் தொடர்பில் அரசாங்கம் தகவல் திரட்டி வருகிறது.

இதற்காக முதலீட்டாளர்களுக்கு 30 தொடக்கம் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படும் என இலங்கை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (2-4)

# கட்டுநாயக்காவில் புத்த சிலையை ஜனாதிபதி திறந்து வைத்தார்

(கொழும்பு)

2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி தள வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்த பகவானின் சிலையொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்த வைத்துள்ளார்.

வானூர்தி தளத்திற்கு வரும் உள்ளூர், வெளியூர் பயணிகளின் முதல் பார்வையாக குறித்த சிலை அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலைக்கு அருகில் உள்ள பெயர் பலகையை திறந்து வைத்த பின்னர் ஜனாதிபதி, புத்த பகவானுக்கு மலர்களை வைத்து பிரார்த்தனை மேற்கொண்டதாகவும் ஜனாதிபதி செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்பின் சமய பிரார்த்தனைகளும் இடம் பெற்றுள்ளன. (2-4)



மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் வலய மட்டத் தமிழ் தினப் போட்டியில் பங்கேற்று முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் அதிபரையும் படத்தில் காணலாம்.

# இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் கைது

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 10 இலங்கை மீனவர்கள் இந்திய கரையோர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.காகிநாடாவுக்கு 120 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்ட இவர்கள் வசம் 5 ஆயிரம் கிலோ மீன்கள் இருந்துள்ளன.

இந்த வருட ஆரம்பத்தில் இருந்து இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்புக்குள் அத்துமீறிய நிலையில் கைது செய்யப்பட் டமை இது 8 ஆவது தடவையாகும்.

இதனடிப்படையில் 17 படகுகளில் இருந்த 84 இலங்கையர்கள் இந்த வருடத்துக்குள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து மொத்தமாக 18 ஆயிரத்து 900 கிலோ கிராம் மீன்கள் கைப்பற்றப்பட்டன. (2-4)

# புகைப்பவர் தனது வாழ்க்கையில் தினமும் 5 நிமிடங்களை இழக்கிறார்

## இன்று உலக புகைத்தல் எதிர்ப்பு தினம்



ஒருநாளில் புகைப்பிடிக்கும் நபர்கள் எத்தனையோ பேரை நாம் காண்கிறோம். சிகரெட், பீடி போன்றவற்றை புகைப்பதால் தமக்கு ஆபத்து, பிறருக்கு ஆபத்து என்று தெரிந்தும் பலர் அதை விடாப்பிடியாக தொடர்ந்து வருகிறார்கள்.

புகை பிடிப்பதை நிறுத்தி விட வேண்டும் என்று தான் நினைக்கிறேன். ஆனால் முடியவில்லை என்று அவர்கள் சொல்வதையும் காண முடிகிறது. ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்காது என்று சொல்வார்கள். அதேபோன்று தான் புகை பிடிப்பவர்களும்! நிறுத்த வேண்டும் என்று நினைத்தாலும் முடியாமல் தவிப்பார்கள்.

புகைப்பிடிப்பவர்களால் அவர்கள் மட்டுமன்றி அவர்கள் அருகில் இருப்பவர்கள் ஏன்... அவருக்கு பிறக்கும் குழந்தைகள் வரை பாதிப்புக்கு ஆளாகின்றார்கள். அளவுக்கு அதிகமாக புகைப்பிடிக்கும் ஆண்களுக்கு உயிரணுக்களுக்கு உயிரணுக்களின் எண்ணிக்கை குறையும் என்று எச்சரிக்கிறது மருத்துவ அறிக்கை.

தற்போது நாகரிகம் என்ற பெயரில் பெண்களில் சிலரும் புகை பிடிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருப்பது கவலையளிக்கக் கூடிய விடயமே. வளரும் பின்தங்கிய நாடுகளுடன் ஒப்பிட்டால் வளர்ந்த நாடுகளில்தான் அதிக பெண்கள் புகைபிடிக்கிறார்கள். பெண்கள் புகை பிடிப்பதால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைக்கு பல நோய்கள் உருவாகும். கருத்தரிக்கும் வாய்ப்பு தள்ளிப் போகும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். ஆனாலும் புகை பிடிப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேதான் செல்கிறது.

புகை பிடிப்பதால் ஏற்படும் தீமைகளை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காகவும் புகைக்கும் பழக்கம் உள்ளவர்கள் அதில் இருந்து விடுபட வேண்டும் என்பதற்காகவும் உலகம் முழுவதும் ஆண்டு தோறும் மே 31 உலக புகை எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

புகைபிடிக்கும் பழக்கத்திற்கு ஆளானவர்களில் தினமும் பல ஆயிரம்பேர் இறந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் இந்தியா போன்ற வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள். புகையிலை எந்த வடிவில் பயன்படுத்தினாலும் அது ஆபத்து நிறைந்ததே.

இந்த புகைக்கும் பழக்கத்தால் வாய், நுரையீரல், சிறுநீரகம், மார்பகம் ஆகியவற்றில் புற்றுநோய் மற்றும் ஆஸ்துமா, காசநோய், நிமோனியா, இதயநோய், உயர் இரத்த அழுத்தம் ஆண்-பெண் மலட்டுத்தன்மை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

தொடர்ந்தும் மேற்கொள்ளும் புகைப்பழக்கம் நுரையீரல் புற்றுநோயை விரைவில் ஏற்படுத்துகிறது. மேலும் புகையிலை மெல்லும் பழக்கம் வாய்ப்புற்றுநோயை உருவாக்குகிறது. மேலும் புகைப் பழக்கம் புற்றுநோய், இதயநோய் ஆகியவற்றை 20 முதல் 30 சதவீத அளவிற்கு அதிகரிக்கிறது. சிகரெட் புகையில் உள்ள கார்பன் மோனக் சைடு நம் உடலுக்குள் சென்று இரத்த திசுக்களையும் இதயத்தில் உள்ள ஒட்சிசன் அளவையும் குறைப்பதால் இந்த பாதிப்பு ஏற்படுகிறது. தினமும் சுமார் 40 சிகரெட்கள் புகைப்பவர் இயற்கையாக அமைந்துள்ள தனது ஆயுட் காலத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பே மரண அடைந்து விடுகிறார். அதாவது தினமும் ஒரு சிகரெட் புகைப்பவர் தனது வாழ்க்கையில் தினமும் 5 நிமிடங்களை இழக்கிறார்.

ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் புகைபிடித்தால் அது ஆஸ்துமாவை இன்னும் அதிகப்படுத்துகிறது. மேலும் மூச்சுத்திணறலை உருவாக்கி உயிருக்கே உலை வைக்கிறது. அதிகம் புகைத்துக் கொண்டிருந்தால் காது தொடர்பான கோளாறுகளேற்படும். காதுகளில் கோளாறுகள் உள்ளவர்கள் புகை பிடிப்பவர்கள் பக்கமே செல்லக் கூடாது. கர்ப்பிணி பெண்கள் புகைத் தால் அது கருவில் குழந்தையையும் பாதிக்கும். குழந்தை இறந்து பிறக்கவும் வாய்ப்பு உண்டு.

கவலையை மறக்க புகை பிடிப்பவர்களைவிட ஆர்வக் கோளா றில் புகை பிடிப்பவர்களே அதிகம். மேலும் பெற்றோரை பார்த்தும் புகை பிடிக்கும் குழந்தைகள் எண்ணிக்கையும் அதிகம் என்கிறது ஒரு சர்வே.

புகைபிடிக்கும் பழக்கத்தை கைவிட வேண்டும் என்று எண்ணுபவர்கள் முதலில் மன அளவில் சிகரெட் பற்றிய எண்ணங்களை, விருப்பங்களை தூக்கி எறிய வேண்டும். அதன் பின்னர் புகைபிடிக்க தோன் றும் போதெல்லாம் வேறு பணிகளில் ஈடுபடமுயற் சிக்க வேண்டும். வீட்டு வேலைகளில் மனைவிக்கு கூட உதவலாம்.

முக்கியமாக புகைபிடிக்கும் பழக்கமுள்ள மற்றொரு நண்பருடன் அவர் புகைபிடிக்க தயாராகிறார் என்றால் எஸ்கேப் ஆகிவிட வேண்டும். இல்லையென்றால் ஒன்று மட்டும் புகைப்போம் என்பதில் ஆரம்பித்து மீண்டும் பழைய நிலைக்கே வந்து விடுவீர்கள்.

அதனால் புகைபிடிப்பவர்களே... அந்த பழக்கத்தால்நீங்கள் மட்டுமன்றி உங்கள் குடும்பத்தாருடன் மற்றவர்களையும் பாதிப்புக்கு ஆளாக்குகிறீர்கள்.

பொது இடங்களில் ஏன் சினிமாவில் கூட புகைபிடிக்கும் காட்சிகளை வைக்க வேண்டாம் என்று அரசாங்கமே வேண்டுகோள் விடுக்கும் போது நாம் வீதிக்கு வீதி புகை பிடித்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? சிந்தியுங்கள் புகைக்கும் பழக்கத்தில் இருந்து விடுபடுங்கள்.

# அமெரிக்கா முன்வைத்த நிபந்தனைகள் தொடர்பில் அரசு தீர்மானம் மேற்கொள்ளவில்லை

அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் மற்றும் திட்டங்களை பின்பற்றுவது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த நாட்களில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் ரொபேட் ஓ பிளேக் இலங்கை பின்பற்ற வேண்டிய சில நிபந்தனைகளை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அமெரிக்காவின் இலங்கை தூதுவர் பெட்ரிகா புட்டினிஸ் ஊடாக வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல். பீரீஸிடம் வலியுறுத்தப்பட்டது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு தொடர இந்த நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என ரொபேட் ஓ பிளேக் வலியுறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், இலங்கை அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கையில் காணப்படுகின்ற இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்தல் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றவற்றை நடைமுறைப்படுத்தல் என்பனவும் உள்ளடங்குகின்றன.

இது தொடர்பில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

எனினும் அரசாங்கம் அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இதுவரையில் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியான அழுத்தங்களை சந்திப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# புறாமலை உல்லாசப்பூங்கா திறந்து வைப்பு

(கொழும்பு)

புறாமலை உல்லாச தேசிய பூங்காவை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

திருகோணமலை நிலாவெளி நடுக் கடற் பகுதியில் புல்மேட்டைக்கு தென்மேற்கில் புறாமலை உல்லாச தேசிய பூங்கா அமைந்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற இவ் வைபவத்தில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்ஷமன் யாப்பா அபேவர்த்தன மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (2-4)

# ஊடகவியலாளர் எக்னெலிய கொடவை கண்டுபிடிக்க ஷிராந்தி ராஜபக்ஷவிடம் கோரிக்கை

(கொழும்பு)

லங்கா ஈ நியூஸ் ஊடகத்தின் கேலிச்சித்திர கலைஞரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பிரகீத் எக்னெலியகொடவை கண்டுபிடிப்பதற்கு ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவிடம் உதவி கோரப்பட்டுள்ளது. பிரகீத் எக்னெலியகொட காணமற் போய் சுமார் 500 நாட்கள் கடந்துள்ளதாக எக்னெலிய கொடவின் மனைவி சந்தியா எக்னெலியகொட தெரிவித்துள்ளார்.

தமது கணவரை கண்டு பிடிப்பதற்கு உதவிகளை வழங்குமாறு சந்தியா, ஷிராந்தி ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எக்னெலிய கொடவின் நிலைமையை அறியாது தாமும் தமது பிள்ளைகளும் பெரும் துயரங்களை அனுப்பவித்து வருவதாக சந்தியா கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தந்தை காணாமற்போன காரணத்தினால் இரண்டாவது மகன் பெரும் மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும் கடந்த ஆண்டில் இரண்டு தடவைகள் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கோரி அனுப்பிய கடிதங்களுக்கு பதில் கிடைக்கவில்லை எனவும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரிடம் தாம் உதவி கோரிய போதிலும் இதுவரையில் எவ்வித பதிலும் தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2-4)

# தொடரும் கனமழையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரிப்பு

(கொழும்பு)

மழை வெள்ளம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்வடைந்துள்ளது.

நாட்டின் பல பாகங்களில் சீரற்ற காலநிலை நிலவி வருவதாகவும் இதனால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மழை வெள்ளம் காரணமாக சுமார்17 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் துணைப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அதிகம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு நிலைமைகள் குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக 234 வீடுகள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளன. மண்சரிவு, இடி, மின்னல் தாக்குதல் மற்றும் நீரில் மூழ்குதல் போன்ற காரணிகளினால் உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு தொடரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (2-4)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 10

"எங்கள் கிராமத்தில் ஆசையாக ஆடு வளர்ப்பார்கள்; கோழி வளர்பார்கள். ஆனால் திருவிழா காலத்தில் அவற்றைக் கடவுள் சந்நிதியில் இரக்கமில்லாமல் பலியிடுவார்கள். வீட்டில் பல மாதங்கள் கொஞ்சி விளையாடிய ஒர் உயிரை வெட்டி கொல்ல எப்படி மனம் வருகிறது இவர்களுக்கு?"

வீட்டில் ஆசையுடன் தென்னை மரம் வளர்க்கிறீர்கள். அதில் விளைந்த தேங்காய்களைக் கடவுள் முன் உடைக்கிறீர்கள். வீட்டில் ஒரு விஷேசம் என்றால் வாழைமரங்களை வேரோடு வெட்டிச் சாய்த்து வாசலில் கட்டுகிறீர்களே அப்போதெல்லாம் உங்களுக்கு குற்ற உணர்வு வந்திருக்கிறதா?

தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பது எந்தக் காலத்திலோ நிரூபிக்கப்பட்டு விட்ட விஞ்ஞான உண்மை என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். மிருகமாவது வெட்டப்படும் தருணத்தில் தான் பதறுகிறது. தாவரத்தை வெட்ட நினைக்கும் சிந்தனையே அதனுள் பல இரசாயன மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் மூலம் நிலை நிறுத்தி இருக்கிறார்கள். மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் உங்களிடம் இருந்து நழுவித் தப்பிக்கும் வசதியாவது இருக்கிறது. இந்த வசதிகூட தாவரங்களுக்கு இல்லை.

நீங்கள் சைவ உணவு சாப்பிடுவதால் அசைவ உணவு சாப்பிடுபவர்கள் எல்லாம் அன்பற்றவர்கள் என்று முடிவு செய்வது மாபெரும் தவறு.

மனித உடலமைப்புக்குச் சைவம் சிறந்ததா, அசைவம்சிறந்ததா என்று கேட்டீர்களேயானால், சைவம்தான் என்று சொல்வேன். அதுவேறு விடயம் மற்றப்படி, ஆட்டை புசிப்பவர்கள், இறைச்சி வெட்டும் இடத்தில் கொன்றால் என்ன, இறைவனின் சந்நிதியில் அதைச் செய்தால் என்ன?

கடவுள் என்று ஒன்றை முன்னிறுத்தி. 'நீயே முதல்வன் நான் இரண்டாவது!' என்று ஒப்புக்கொண்டு, அவன் முன் படைக்கும் பணி இருக்கிறதே, அந்த உணர்வு மனிதனுக்கு நல்லதுதான்.

வாழைப்பழமாக இருந்தால் என்ன, தேங்காயாக இருந்தால் என்ன, ஆடாக இருந்தால்என்ன, கோழியாக இருந்தால் என்ன?

கடவுள் முன் காட்டிவிட்டு, நாம்தான் சாப்பிடப்போகிறோம் என்பதால், நமக்கு விருப்பமானது எல்லாம் நம் ருசிக்குத் தகுந்தபடி சமைத்து அவர் முன் படைக்கிறோம்.சைவம் பிடித்தவர்கள் சைவம் சமர்ப்பிக்கிறார்கள். அசைவம் பிடித்தவர்கள் அசைவம் படைக்கிறார்கள். சில இடங்களில் சாராயம், சுருட்டு என்றெல்லாம் சுவடப்படையல் வைக்கிறார்களே!

கடவுள் மட்டும் தனக்குப் படைக்கப்பட்டதை எல்லாம் சாப்பிடத் தொடங்கிவிட்டால், அடுத்த வேளைக்கு அவரைப்பட்டினி போட்டுவிடுவோம்.

**"கடவுள் உயிர்களையா பலி கேட்கிறார்?"**

நான் உயிர்ப்பலி கொடுப்பதை ஆதரிப்பவன் அல்ல. ஆனால், சில உண்மைகளை நீங்கள் உணரவேண்டும்.

மனிதனைப் படைப்பது கடவுள் என்று உலகில் மற்ற இடங்களில் நம்பப்படலாம். ஆனால் நம் பாரம்பரியத்தில் கடவுளைப் படைக்கும் நிபுணத்துவத்தை மனிதன் பெற்றிருந்தான்.மனிதன் உச்சபட்ச மேம்பட்ட நிலையை அடைவதற்குத் துணையாக பல கடவுள்கள் இங்கு உருவாக்கப் பட்டனர். அந்தக் கடவுள்களில் சிலர் ரசிக்கத்தக்கவர்கள்; சிலர் அச்சுறுத்துபவர்கள்; சிலர் அன்பானவர்கள்; சிலர் ஆக்ரோஷமான வர்கள்; ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு விதமாக மனிதனின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டது.

கோயில்கள், கடவுள்கள் வசிப்பதற்காகக் கட்டப்பட்ட குடியிருப்புக்கள் அல்ல; மனிதர்கள் வளர்ச்சி பெறுவதற்காக நிறுவப்பட்ட தலங்கள். அந்த உச்சபட்ச விஞ்ஞானத்தை எளிய வார்த்தைகளில் விளக்கிவிடமுடியாது.

சக்தி வடிவமாக நிலைநிறுத்தப்பட்ட கடவுள் உயிர்ப்புடன் இருக்க அவ்வப்போது உயிர்ச்சக்தியை மனிதன் வழங்கவேண்டிஇருந்தது. தேங்காய் உடைக்கையில் விடுவிக்கப்படும் சக்தியே சில கடவுள்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால், காளி போன்ற வடிவங்கள் உயிர்ப்புடன் இருக்க உயிர்ப்பலி தேவைப் பட்டது.

அதனால், தான் ராமகிருஷ்ணரே அதை அனுமதித்தார் .

**"என்னது?ராமகிருஷ்ணர் உயிர்ப் பலியை அனுமதித்தாரா?"**

ராமகிருஷ்ணர் காளியின் மீது மிகுந்த பிரியம் கொண்டவர் காளியை இழக்க விரும்பாததால், அவளுக்குத் தேவையான பலியை அவள் சந்நிதியில் அவர் அனுமதித்தார். அவரைப் புரிந்துகொள்ள பக்குவம் வேண்டும்.

ராமகிருஷ்ணரின் வார்த்தைகள் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தான் ஒருவன். அவனது படுக்கையில் ஏராளமான மூட்டை பூச்சிகள் இருந்தன.

'மனித உயிர் மற்ற உயிர் என்று பார்க்காமல் எல்லாவற்றிடமும் அன்பாக இருக்கும்படி ராமகிஷ்ணர் அடிக்கடி சொல்வாரே தொந்தரவு செய்யும் இந்த மூட்டைப்பூச்சிகளை எப்படிக்கொல்வது?' என்று அவன் குழம்பினான்.

தினமும் தூக்கம் பறிபோயிற்று. குருவிடமே கேட்கலாம் என்று, உறக்கமிழந்து கள்ளப்புடன் அவரைத் தேடி ஒரு நாள் வந்தான்.அங்கே அவன் கண்ட காட்சி திகைப் பூட்டியது.

ராமகிருஷ்ணர் தன் பாயில் அமர்ந்திருந்தார். அதிலிருந்து ஒவ்வொரு மூட்டைப் பூச்சியாக எடுத்து நசுக்கிக் கொண்டு இருந்தார்.

எந்த உயிரையும் காழ்ப்போ, விரோதமோ, வெறியோ இல்லாமல் கையாளும் வரை அதில் தவறில்லை என்பதை, ராமகிஷ்ணர் தன் செயல் மூலம் அவனுக்கு விளக்கிவிட்டார் .

## பலி கொடுங்கள்...!

ஒன்றை தியாகம் செய்தால் தான் மற்றதைப் பெற முடியும்.

நீங்களும் பலி கொடுங்கள் உயிர்களை அல்ல! கோபம், காழ்ப்பு, விரோதம் போன்ற உங்கள் வீண் அகங்காரங்களை பலி கொடுங்கள் ஒரு பலி கொடுக்கும் தீவிரத் தோடு உங்கள் உயிர்ச்சக்தியை முழுமையாக செயல்களில் செலுத்தி ஈடுபடுங்கள் தலையை வெட்டினால்தான் பலி என்பதல்ல அன்றாடம் உங்கள் சுயநலத்துக் காக எத்தனைபேரின் மகிழ்ச்சியை நீங்கள் பலி கொடுக்கிறீர்கள் என்று கவனியுங்கள் அந்த பலிகளை நிறுத்துங்கள்;

விஷம் விலகும் அமுதம் ருசிக்கும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சமுதாய உணர்வுகளை தட்டி எழுப்பிய பெண் எழுத்தாளர்கள் 02

மனிதர்களின் அனுபவங்கள்தான் சரித்திரங்களைப் படைக்கின்றன. அவர்களின் விழிப்புணர்ச்சிகள்தான் ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டமைக்க வழிகாட்டும். இதுவரை, ஒடுக்கப்பட்ட மக்களின் துயரத்தைப் படைப்பிலக்கியமாக படைத்த பெண்களாற்தான் பல அரசியல், சரித்திரமாற்றங்கள் நடந்தன. அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் பின் கறுப்புமக்களை அடிமையாக நடத்திய சட்டதிட்டங்களுக்கு எதிராகச் சில சமய நலவாதிகளும் சமூகநலவாத நல்ல மனிதர்களும் குரல் கொடுத்தாலும், ஹரியாட் பீச்சர் ஸ்ரோவ்(1812) எழுதிய "அங்கில் ரொம் கபின்" என்ற கதை (1851-52) கறுப்பு மக்களுக்கு இனவெறி பிடித்த பணம் படைத்த சில வெள்ளையர்கள் செய்யும் கொடுமைகளை மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டியது மட்டுமல்லாமல் அமெரிக்கக் கறுப்பு மக்களின் பிரச்சனையை மக்களின் மனித உரிமைப் போராட்டமாக மாற வழிகொடுத்தது.

அமெரிக்காவின் சகல மக்களுக்கும் சமத்துவம் வேண்டும் என்ற தத்துவத்தில் போராடிய ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன், அமெரிக்க உள்நாட்டுப்போர் நடந்து முடிந்த பின் கறுப்பர்களுக்கான தடைகளை நீக்கும் சட்டங்களைக் கொண்டு வந்தபோது தனக்குப்பிடித்த இலக்கியவாதியான ஹரியட் அவர்களின் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய சேவையைப் பாராட்டினார்.

1950 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் தென்பகுதிகளில் இருந்த கறுப்பு மக்களுக்கெதிரான வெள்ளை இனவாதிகளின் குரோத உணர்வுகள் அக்காலகட்டத்தில் வெளிவந்த, ஹார்ப்பா லீ என்ற பெண்மணியால் எழுதப்பட்ட "த கில்லிங் ஒவ் எ மொங்கிங் பேர்ட்" நாவலில் வெளிக் கொணரப்பட்டது.

அந்தக்கதை படமாக வெளிவந்து ஒஸ்கார் பரிசைத் தட்டிக்கொண்டு போனது மட்டமல்லாது கோடிக்கணக்கான வெள்ளையின மக்களின் மனித நேய உணர்வுகளையும் தட்டி எழுப்பியது.

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களில் அடிபட்ட பெண்களின் தன்மான உணர்ச்சிகள், அமெரிக்க சரித்திரத்தை மாற்றியதற்கு, அமெரிக்க கறுப்பு மாதுவான றோசா பார்க் (1913-2005) என்பவரின் நடத்தை அதற்கு அத்திவாரம் போட்டது.

அவர் பிரயாணம் செய்த வாகனத்தில் அவர் இருந்த இடத்தை விட்டு எழும்பி ஒரு வெள்ளை நிற மனிதனுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தார். கறுப்பு நிறப்பெண் என்பதால் அவருக்கு ஏற்பட்ட அவமானத்தை எதிர்த்தார். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அமெரிக்கக் கறுப்புமக்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

மகாத்மாகாந்தியின் சாத்வீகப் போராட்டம் மாதிரி கறுப்புமக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கெதிராகப் பல போராட்டங்கள் வெடித்தன.

இன்று ஒரு கறுப்பு இன மனிதன் உலகில் மிகவும் பலம் வாய்ந்த வெள்ளை மாளிகையில் இருப்பதற்கு றோசா பார்க் போன்ற பெண்மணிகள் முன்னோடிகளாகவிருந்தார்கள். 1960 ஆம்ஆண்டு உச்சநிலை பெற்ற கறுப்பு மக்களின் போராட்டம் அலிஸ் வால்க்கர் போன்ற அற்புதமான கறுப்புப்பெண் படைப்பாளிகளை உலகுக்குத்தந்தது.

ஜேர்மனியில் நாஜிகளின் தலையெடுப்பை எதிர்த்து பல விடயங்களை எழுதினார் றோசா லக்சம்பேர்க்(1870-1919) என்பவர். அதனால் அவர் படுகொலை செய்யப்பட்டார். ஆனால் அவர் எழுதிய எழுத்துக்கள் சாகாவரம் பெற்றன.

பிரான்சிய ஏகாதிபத்தியம் அல்ஜீரிய மக்களின் போராட்டத்தை நசுக்கமுற்பட்டபோது அதற்கெதிரான விடுதலைச்சக்திகளுடன் தன்னை இணைத்துக்கொண்டார். சுமோன் டி பூவா(1908-1986) என்ற பெண்ணியவாதி.சமுதாயத்தில் பெண்களின் நிலை எப்படி வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதை இவர் எழுதிய "த செக்கண்ட் செக்ஸ்" என்ற புத்தகம் தெளிவாகக் காட்டுகிறது.

1908ஆம் ஆண்டு தொடக்கம் முதலாவது உலகமகாயுத்தம் ஆரம்பிக்கும் வரைக்கும் (1914) பெண்களுக்கான வாக்குரிமைக்காகப் போராடிய எமிலி பெங்கேஸ்ட் (1858-1928) போன்றவர்கள் பெண்ணின் உரிமைக்கும் சமத்துவத்துக்குமான பல படைப்புக்களை வெளியிட்டார்கள்.

**இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**
**இங்கிலாந்து**

இதைப்படித்த பிரித்தானியப் பெண்கள் பல போராட்டங்களை நடத்தி பெண்களுக்கு வாக்குரிமையைப் பெற்றார்கள்.

வாக்களிக்கும் உரிமை நிலப்பிரபுகளுக்கு மட்டும்தான் என்ற பிற்போக்குவாதத்தை எதிர்க்கவும் பெண்களுக்கான சமத்துவத்தை சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் எழுதிய எழுத்துக்கள் அளப்பரியவை.

(தொடரும்)

# நிபுணர்குழு மேற்கொண்டுள்ள பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## நவநீதம்பிள்ளை தெரிவிப்பு



இலங்கையின் கடப்பாடு பற்றிய ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து சில விடயங்களைப் பேச அனுமதியுங்கள் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 17 ஆவது அமர்வு நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தனது ஆரம்ப அறிக்கையினை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரச படைகளாலும் விடுதலைப்புலிகளாலும் போரின் இறுதிக்கட்டத்தில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிராக பாரிய அளவில் இழைக்கப்பட்ட வன்முறைகள் குறித்த நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணையை நடத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. அத்தோடு இந்த நிபுணர் குழு மேற்கொண்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எனது கோரிக்கையுமாகும்.

இலங்கை தொடர்பான தனது முன்னைய அக்கறையின் வெளிச்சத்தில் இந்த முக்கியமான அறிக்கையிலுள்ள புதிய தகவல்கள் குறித்து மனித உரிமைகுழு தனது எதிர்விளைவை வெளிப்படுத்துவது முக்கியம் என நான் கருதுகிறேன் என வலியுறுத்தி உள்ளார். (2-4)

# கலந்துரையாடல் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலானது இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யுத்த வெற்றி, கள அனுபவங்கள் பற்றிய சர்வதேச மாநாடு இன்று

(கொழும்பு)

பயங்கரவாத இல்லாதொழிப்பு குறித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் சர்வதேச மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்த வெற்றி, கள அனுபவங்கள், மனிதாபிமான மீட்பு நடவடிக்கைகள் மற்றும் தந்திரோபாயப் பயன்பாடு ஆகியன பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளது.

முன்னாள் போராளிகளை சமூகத்தில் மீள இணைத்தல், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது.

அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி ஆகியன தொடர்பிலும் இந்த கருத்தரங்குகளில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

42 நாடுகளைச் சேர்ந்த 300 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-2)

# இந்திய அரசின் அழுத்தம் காரணமாக அவசரகாலச் சட்டம் நீக்கப்படவுள்ளது

## தேசப்பற்றுடைய தேசிய அமைப்பு குற்றச்சாட்டு

இந்திய அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக அவசரகாலச் சட்டம் நீக்கப்படவுள்ளதாக தேசப்பற்றுடைய தேசிய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தியாவின் அழுத்தங்களுக்காக அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டிய அவசியமில்லை என தேசப்பற்றுடைய தேசிய அமைப்பின் சமூக விவகாரச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது இரு நாடுகளும் கூட்டாக இணைந்து வெளியிட்ட அறிக்கையில் அவசரகாலச் சட்டம் இரத்து செய்யப்படவுள்ளமை குறித்து அறிவிக்கப்பட்டது.

தேசப்பற்றுடைய தேசிய இயக்கம். விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் இணை இயக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து உள்நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-4)

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு நேற்று நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இம் மத்திய செயற்குழு பேச்சுவார்த்தையில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

பிரசார நடவடிக்கைகள் மற்றும் தொகுதி ஒழுங்கமைப்பு போன்ற தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் மற்றும் தனியார்துறை ஓய்வூதியத் திட்டம் ஆகியன தொடர்பில் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. (2-4)

# பத்திரிகை பதிவொளி மற்றும் பல்கலையன் இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட ஊடகக் கற்கை மாணவர்களின் பத்திரிகை பதிவொளி மற்றும் பல்கலையன் பயிற்சி இதழ் வெளியீடுகள் இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சி.லோகிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியை செல்வி வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆவணப் படங்கள் மற்றும் பத்திரிகையை பிரதம விருந்தினர்கள் வெளியிட்டு வைக்க சிறப்பு விருந்தினரும் ஊடகக் கற்கை மாணவர்களும் பெற்றுக் கொள்வர்.

ஆவணப்பட மதிப்பீட்டு உரையினை நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் திருமதி க.நவதர்சினியும் பல்கலையன் இதழ் மதிப்பீட்டு உரையினை வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ)

# இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்த திட்டம்

இலங்கை தொடர்பில் தவறான தகவல்கள் சர்தேச நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, அவ்வாறான தவறான தகவல்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் சர்வதேச நாடுகளை தெளிவுபடுத்த அரசாங்கம் முக்கிய வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அந்த வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.


அண்மையில் துருக்கி, இத்தாலி, போர்த்துக்கல்,ருமேனியா, இங்கிலாந்து உள்ளிட்ட சில நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா நாடு திரும்பிய பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது, ஐரோப்பிய நாடுகளில் சிலவற்றுக்கு நான் மேற்கொண்ட விஜயங்களின் போது அந்நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன். இந்தச் சந்திப்புக்களின் போது இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெளிவாக விளக்கிக் கூறினேன்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் தாருஸ்மன் அறிக்கை விடயத்திலும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் குறித்த நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கினேன். இதேவேளை, இலங்கை தொடர்பில் தவறான தகவல்கள் சர்வதேச நாடுகளுக்கு சென்றுள்ளன என்பதையும் இந்த விஜயத்தின் ஊடாக அறிந்துகொள்ள முடிந்தது. எனவே, அவ்வாறான தவறான தகவல்கள் தொடர்பில் எமது சரியான நிலைப்பாட்டை விளக்குவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

அந்த வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச நாடுகளுக்கு எமது செயற்பாடுகள் மற்றும் முன்னேற்ற நிலைமைகள் தொடர்பில் சரியான, உண்மையான தகவல்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மேலும் பரப்பப்பட்டுள்ள தவறான தகவல்கள் தொடர்பில் எமது உண்மையான நிலைப்பாட்டை விளக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் பல நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-2)



சாவகச்சேரி செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் வாடிக்கையாளரான அமரர் பத்மநாதன் சுரேஸ் மரணமடைந்ததையடுத்து அவருக்கான இழப்பீட்டுத் தொகை அண்மையில் வழங்கப்பட்டது. இறந்தவரின் குடும்பத்தினரிடம் 9 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை சாவகச்சேரி கிளை முகாமையாளர் வி.சுதர்சன் வழங்குவதையும் அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி கு.பிரகாஸ் மற்றும் விற்பனை ஆலோசகர் வி.யோன்சன் சுரேஷ், பா.நியூட்டன் சதீஸ் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## நிபுணர்குழு அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு தவறானது

(கொழும்பு)

நிபுணர் குழு அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு தவறானது என ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிரான அரசியல் ரீதியான உணர்வுகளை வெளிப்படுத்துவதில் பலனில்லை எனவும் பொறுப்புணர்ச்சியுடன் குறித்த அறிக்கைக்கு பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகரமான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றை அரசாங்கம் முன்னெடுக்க முனைப்புகாட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (2)

## ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் இலங்கை விடயங்கள் முன்வைக்கப்படும்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைக்கவுன்சிலின் அமர்வில் நிபுணர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படாத போதிலும் இலங்கை தொடர்பில் சிற்சில விடயங்கள் பிரஸ்தாபிக்கப்படும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிக்கப்படாத போதிலும் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்றுக்கான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை மனித உரிமைகள் கவுன்சிலின் அமர்வில் முன்வைக்க ஒரு சில மேற்கத்தேய நாடுகள் தயாராகவுள்ளன.

அப்பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்படுமிடத்து இலங்கை அவ்வாறானதோர் விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

அதற்கிடையே அவ்வாறானதோர் பிரேரணை மனித உரிமைக் கவுன்சில் அமர்வில் முன்வைக்கப்படும் பட்சத்தில் குறைந்த பட்சம் அதற்கான வாக்கெடுப்பை எதிர்வரும் செப்டெம்பர் வரையாவது தள்ளி வைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அதற்குள்ளாக மனித உரிமைக் கவுன்சிலின் உறுப்பு நாடுகளை தங்கள் பக்கம் வளைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அரசாங்க உயர்மட்டத்தினரிடம் இருப்பதாக தெரிய வந்துள்ளது. (2-4)

## சுவிஸ் நாட்டில் தஞ்சம் கோரியவர்களை திருப்பியனுப்புவதால் பாதிப்பு ஏற்படும்

(கொழும்பு)

சுவிஸ் நாட்டில் அகதிகள் தஞ்சம் கோரிய தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைக்கு எதிராக அச்சுறுத்தலுக்கு இலக்கான மக்களுக்கான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் அண்மையில் பேர்ண் மாநகரில் நடைபெற்றது.

சுவிஸ் நாட்டின் திருப்பியனுப்பும் நடவடிக்கை இலங்கையில் மனித உரிமைகளைப் பாதிக்குமா? எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் லுற்சேர்ண் மாநில பாராளுமன்ற உறுப்பினர் லதன் சுந்தரலிங்கம், பல்மைரா தொண்டு நிறுவன இலங்கை இணைப்பாளரும் உளவள ஆலோசகருமான தயா தியாகராஜா, சுவிஸ் மத்திய குடிவரவுத் திணைக்களத்தின் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான மத்திய நிலையத் தலைமை அதிகாரி பிலிப் ஹாஸ், அச்சுறுத்தலுக்கு இலக்கான மக்களுக்கான அமைப்பின் தலைவர் கிறிஸ் வீடமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் தமிழ் மக்களுக்கு முறையான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட்டிராத நிலையில் தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் சுவிஸ் அரசாங்த்தின் முடிவானது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று இக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் சுவிஸ் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவின் படி சுமார் 2 ஆயிரம் பேர் வரையிலான தமிழர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்த குடிவரவுத் திணைக்கள அதிகாரி மாதமொன்றுக்கு சுமார் 100 தமிழர்கள் வரை தற்போது அகதித் தஞ்சம் கோரி வருவதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, திருப்பி அனுப்பப்படும் யாவரும் சுய விருப்பின் பேரிலேயே அனுப்பப்படுவர்கள் எனவும் திருப்பி அனுப்பப்படும் முடிவுக்கு எதிராகத் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார் .(2-4)

## இலங்கையின் இறைமைக்கு எதிராக வெளிநாட்டு சக்திகள் செயற்படுகின்றது

### பசில் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

வெளிநாட்டு சக்திகள் இலங்கையின் இறைமைக்கு எதிராக செயற்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் பசில் ராஜபக்ஷ சுமத்தியுள்ளார்.

குறித்த வெளிநாட்டு சக்திகளும் சில குழுக்களும் நாட்டில் ஊடுருவி நாட்டின் இறைமையை தகர்க்க முயற்சிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அமைச்சர், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இந்த முயற் சிகள் மேற்கொள்ளப்படுவதாக பசில் ராஜபக்ஷ குற்றஞ்சுமத்தியுள்ளார். (2-4)




★ 1223-செங்கிஸ் கானின் மங்கோலியப் படைகள் கிப்சாக்கியரை சமரில் தோற்கடித்தனர்.

★ 1889-பென்சில் வேனியாவில் ஜோன்ஸ்டவுன் நகரில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததில் 2 ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1900-பிரித்தானியப் படைகள் ரொபேர்ட் பிரபு தலைமையில் ஜோகனஸ்பேக் நகரைக் கைப்பற்றின.

★ 1902-தென்னாபிரிக்காவில் இரண்டாவது போவர் போர் முடிவுற்றது. தென்னாபிரிக்கா பிரித்தானியாவின் முழுமையான ஆட்சியின் கீழ் வந்தது.

★ 1910-தென்னாபிரிக்க ஒன்றியம் அமைக்கப்பட்டது.

★ 1911-டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

★ 1921-ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா துல்சா என்ற இடத்தில் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது 39 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1931-பாகிஸ்தானின் குவெட்டா என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் சிட்னி நகரைத் தாக்கின.

★ 1961-தென்னாபிரிக்கா பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகியது. தென்னாபிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1962-மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

★ 1970-பெருவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் யூங்கே என்ற நகர் முழுமையாகப் புதையுண்டதில் 47 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1997-கனடாவில் நியூ பிரன்ஸ்விக்கையும் பிரின்ஸ் எட்வர்ட் தீவையும் இணைக்கும் கூட்டமைப்புப் பாலம் திறக்கப்பட்டது.

★ 2005-இலங்கையின் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தாலிப் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 2007-டொரண்டோ தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

**பிறப்புக்கள்**

★ 1048-ஒமர் கையாம், பேர்சிய மெய்யியலாளர் (இ.1131)

★ 1911-கே.சி.எஸ் பணிக்கர், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓவியர் (இ.1977)

★ 1931-நீலாவாணன், ஈழத்துக் கவிஞர் (இ.1975)

**இறப்புக்கள்**

★ 1809-ஜோசப் ஹேடன், மேற்கத்தேய இசையறிஞர் (பி.1732)

★ 1832-கால்வா, பிரெஞ்சு கணிதவியலர் (பி. 1811)

★ 1987-ஜோன் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் (பி.1937)

**சிறப்பு நாள்**

★ புகையிலை எதிர்ப்பு தினம்



**1981- யாழ்ப்பாணம் பொதுநூலகம் எரிக்கப்பட்ட தினம்**

## தாவீது அடிகளாரின் 30 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாநிதி ஹ.சி.தாவீது அடிகளாரின் 30 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு இல.5, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் ஆன்ம சாந்திக்காக பூசை ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## விளையாட்டு போட்டிகள்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்து, கிரிக்கெட், கரப்பந்துபோட்டிகள் நடைபெறவுள்ளன.

பங்குபற்றும் கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மைக்கல் விளையாட்டுக் கழகத்திடம் பதிவு செய்து கொள்ளுமாறு கழ்கச் செயலாளர் த. வேணுகானன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-24)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறுசெல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணியளவில் கலைநிலா கலைஞர்கள் வழங்கும் பக்திப் பாடல்கள் நிகழ்வு இடம்பெறும். (ஸ்ரீ-34)

# புகைப்பழக்கத்திலிருந்து விடுபடுவோம்! புதிய வாழ்வுக்கு வழி சமைப்போம்!!!

இன்று (மே மாதம் 31 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. புகைத்தலால் மனித குலத்திற்கு ஏற்படும் தீங்குகளை வலியுறுத்தும் நோக்கிலேயே உலக சுகாதார ஸ்தாபனத்தால் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலும் இத்தினத்தை முன்னிட்டு புகைத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் புகைத்தலால் ஏற்படும் மருத்துவ பின்விளைவுகளால் சராசரியாக நாளொன்றிற்கு அறுபது பேர் இறக்கின்றனர். இந்த மரணங்கள் அநாவசியமானவை, தடுக்கக் கூடியவை. இந்த மரணங்களை தடுக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஒருவர் புகைப்பதனால் அவரது உடல் நலத்திற்கு மட்டுமன்றி அவர் விடும் புகையால் அருகில் இருப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, உலகின் பல நாடுகளில் பொது இடங்களில் புகைப்பது சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலும் இச்சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனை கடுமையாக அமுல்படுத்த பொதுமக்கள் அனைவரது ஒத்துழைப்பு அவசியம்.

வைத்தியசாலைகள், பொது அலுவலகங்கள், வங்கிகள், பஸ் நிலையங்கள் , உணவகங்கள்,சினிமா தியேட்டர்கள், வணக்கத் தலங்கள், பொதுப் போக்குவரத்து சாதனங்கள், சந்தைகள் போன்ற பொது இடங்களில் யாராவது புகைத்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸாருக்கு, சுகாதார வைத்திய அதிகாரிக்கு, பொது சுகாதார பரிசோதகருக்கு மற்றும் மதுவரி திணைக்கள உத்தியோகத்தருக்கு அறியத்தரவும். இவர்கள் உடனடியாக இவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவர்.

அதேபோல் எமது நாட்டில் 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட், மதுபானங்கள் விற்பனை செய்வதும் சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறி எங்காவது விற்பனை இடம்பெற்றால் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பொதுமக்கள் அறிவிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது இளைய சமூகத்தினர் மத்தியில் புகைத்தல், மதுபாவனை என்பன அதிகரிக்க சாதகமான சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் இச்சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப் படுத்த தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் மதுபாவனைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபட விரும்பினால் அவர்களுக்கு சிகிச்சையளித்து புனர்வாழ்வு அளிக்கும் நிலையம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கி வருகின்றது. மதுபாவனையிலிருந்து விடுபட்டு புதிய வாழ்க்கையை அமைக்க விரும்புபவர்கள் இதன் சேவையை நாடலாம்.

யாழ். மாவட்டத்தில் புகையிலை ஒரு பாரம்பரிய பணப்பயிராக பயிரிடப்பட்டு வருகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் புகையிலைக்கு எதிரான போராட்டம் வலுப்பெற்று வருகின்றது. அதற்கெதிரான கட்டுப்பாடுகளும் இறுக்கமாகி வருகின்றன. அதன் பாவனையும், கேள்வியும் படிப்படியாக குறைந்து செல்கின்றன.

எனவே, எமது விவசாயிகளும் புகையிலைச் செய்கையை நீண்ட காலத்திற்கு நம்பியிருக்க முடியாது. விவசாயத்திணைக்களத்தின் ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும் புகையிலைக்கு மாற்றீடான பணப் பயிர்களை யாழ். மாவட்டத்தில் அறிமுகம் செய்ய வேண்டும். யாழ். மாவட்ட விவசாயிகள் தற்போதே தம்மை இதற்கு தயார்ப் படுத்திக் கொள்ள வேண் டும்.

சமூகத்தலைவர்கள், சமயப் பெரியோர்கள், கல்விச் சமூகத்தினர், மருத்துவ உலகத்தினர் தத்தமது பிரதேசங்களில் இவற்றைக்கட்டுப்படுத்த ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்க வேண்டும். பொலிஸ் உத்தியோகத்தர்கள், மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள்,பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இச்சட்டங்களை இறுக்கமாக அமுல்படுத்த முன்வரவேண்டும்.

எனவே, இன்றைய சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் நாம் ஒவ்வொருவரும் எமது பங்களிப்பை வழங்கி எமது எதிர்கால சந்ததியின் ஆரோக்கியமான வாழ்விற்கு வழிசமைப்போம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# யாழ். மாநகர சபைக்கு சொந்தமான காணியில் ஐந்து மாடிகளைக் கொண்ட கலாசார மண்டபம்

## யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் நிதியுதவியுடன் யாழ். மாநகரசபைக்கு சொந்தமான காணியில் கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் சபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வரின் தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். பொதுநூலகத்திற்கு அருகாமையிலுள்ள மாநகரசபைக்கு சொந்தமான காணியிலேயே ஐந்து மாடிகள் கொண்ட மேற்படி கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை இந்தியா வழங்கவுள்ளதோடு அதன் நிர்வாகப் பொறுப்பை மாநகர சபையிடம் ஒப்படைப்பதாகவும் வாக்குறுதியளித்துள்ளது.

மேலும் கலாசார மண்டபத்தை அமைப்பதற்காக கட்டட வடிவமைப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த கலாசார மண்டபத்தில் கலைப் படைப்புக்கள், மாநாடுகள், விரிவுரைகள்எனப்பலநிகழ்வுகள்இடம்பெறவுள்ளது.

திராவிடக் கலை மரபுடன் அமைக்கப்படவுள்ள இந்தக் கலாசார மண்டபம் தமிழ் பேசும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## மகாபாரதம் தொடர் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் மகாபாரதம் தொடர் சொற்பொழிவை பண்டிதர் பொன். சுகந்தன் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-35)

## நிறுவன தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மே மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)







வட மாகாணத்தில் முகாமைத்துவ உதவியாளருடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். இந்து கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, வட மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ரி.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)





கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் ஊவா மாகாண சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக பார்வையிடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் வேலைத்திட்டங்கள் தொடர்பாக பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# தமக்கு சார்பான விதத்தில் இலங்கை அரசை ஆட்டுவிக்க இந்தியா முயற்சி

## அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்திற்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தி கவிழ்ப்பதற்காகவே பரந்தளவிலான அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார். எமது பிரச்சினைகளை பயன்படுத்தி எம்மை மண்டியிடச் செய்ய இந்தியாமுயலுமானால் அதற்கு ஒருபோதும் இடமளிக்கலாகாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் அண்மையில் வெளியிட்ட கூட்டறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இக்கூட்டறிக்கையில் இலங்கை அரசாங்கம் எதனையும் நிச்சயப்படுத்தி குறிப்பிடவில்லை. இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவே உள்ளன்.

தீர்க்கமான இணக்கப்பாட்டுக்கு வந்ததாக எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தமக்கு சாதகமான விதத்தில் இலங்கை அரசாங்கத்தை ஆட்டுவிப்பதற்கு இந்தியா முயற்சிகளை மேற்கொள்வது நன்றாக வெளிப்படுகிறது.

முன்னைய காலங்களைப் போன்ற இந்தியாவின் செயற்பாடுகளை நாம் எதிர்பார்க்கவில்லை . இலங்கை விசாலமான நாடு என்பதால் மாலைதீவு மீது அரசியல் நிபந்தனைகளை விடுக்கும் அதிகாரம் எமக்குக் கிடையாது.

இதேபோன்று இந்தியாவிற்கும் எம்மீது அரசியல் நிபந்தனைகளை விதிப்பதற்கு அதிகாரம் கிடையாது. இலங்கை சுயாதீனமான இறைமையுள்ள நாடு. சீனா எமக்கு உதவிகளை வழங்குகிறது. கடன் வழங்குகிறது. அபிவிருத்தி உதவி செய்கிறது.

ஆனால், அதற்காக எம்மீது அரசியல் நிபந்தனைகளை விதிப்பதில்லை. உள்நாட்டுப் பிரச்சினையிலும் தலையிடுவதில்லை. சீனாவின் இக்கொள்கைய்ய இந்தியா முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.

இதனை முன்னெடுத்தால் கீர்த்தியும் புகழும் கிடைக்கும். அதை விடுத்து எமது பிரச்சினைகளைப் பயன்படுத்தி எம்மை மண்டியிடச் செய்ய முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்கலாகாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான செயற்பாடுகளுக்கு அடிபணிய மாட்டார் என பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால், இந்தியாவுடனோ வேறெந்த நாட்டுடனோ அநாவசியமாக பிரச்சினைகளை ஏற்படுத்தி கொள்ளும் தேவை எமக்குக் கிடையாது. இதனை இந்தியா புரிந்து கொள்ளவேண்டும். அரசாங்கத்திற்குள் ஒற்றுமையை சீர்குலைத்து முரண்பாடுகளை ஏற்படுத்தும் தேவை சில நாடுகளுக்கு உள்ளது. நாட்டிற்குள் பலமான எதிர்க்கட்சி இல்லாததை இந்நாடுகள் அறிந்துள்ளன.

எனவே, அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமானால் உள்ளுக்குள் பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே பரவலான அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளுமாறு இந்நாடுகள் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன.

இதனை முன்னெடுக்க முனைந்தால் அரசாங்கத்திற்குள் முரண்பாடுகள், பிரச்சினைகள் தலைதூக்கும். அதனை பயன்படுத்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதே இவர்களின் நோக்கமாகும்.

எனவே, இந்தப் பொறியில் நாம் சிக்கிவிடக் கூடாது. அதற்கான உரிமையும் எமக்குக் கிடையாது. இப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி சிறந்த முறையில் அரசியல் காய்களை நகர்த்தி வருகின்றார் என்றார். (2-4)

# பேருந்தும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி

(கொழும்பு)

புத்தளம் வீதியிலுள்ள ஆரச்சிக்கடுவ பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் லொறியொன்றும் நேருக்குநேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. லொறிச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் லொறியில் இருந்த மற்றொருவரும் படுகாயமடைந்துள்ளார்.

மேலதிக சிகிச்சைகளுக்காக படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு வாகனங்களும் வேகமாக பயணித்தமையினாலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சுத்தமான கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு விருதுகள்

## சுகாதார அமைச்சு புதிய திட்டம்

சுத்தமான நகரங்களையும் கிராமங்களையும் தெரிவு செய்து விருது வழங்கி கௌரவிக்கும் புதிய திட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு ஆரம்பிக்க உள்ளது.

டெங்கு, சயரோகம் போன்ற நோய்கள் அதிகரித்துள்ளதையடுத்தே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் சுத்தமான பத்து நகரங்கள் மற்றும் பத்து கிராமங்ககும் இதேபோன்று அசுத்தமான 10 நகரங்கள் மற்றும் 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட உள்ளன.

சுத்தமான நகரங்கள் மற்றும் கிராமங்கள் தொடர்பாக ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்யப்பட்டு விருது வழங்கவும் அதே வேளை அசுத்தமான நகரங்கள் மற்றும் கிராமங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# தனியார் ஓய்வூதிய சட்டமூலம் குறித்து தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் கலந்துரையாடல்

தனியார்துறை சேவையாளர்களுக்கான உத்தேச ஓய்வூதியக் கொடுப்பனவு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னர் தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தொழில்துறை அமைச்சின் செயலாளர் உபாலி விஜேவீர வெளியிட்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் போது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய நாடாளுமன்றத்தில் அதனை சமர்ப்பித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

உத்தேச தனியார்துறை ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பில் ஜனாதிபதியுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் தொழிற்சங்கங்களின் ஆலோசனைகளும் கருத்தரங்குகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

குறித்த ஆலோசனைகள் தற்போது நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஓய்வூதிய சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும் நடவடிக்கை தாமதமடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் தனியார்துறை சேவையாளர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு தொழில் துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

02.06.2011 இல் அகவை 60 இல் மணிவிழா காணும்

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அம்மா அவர்கள்

(வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)



கல்விச் சேவையில்:-

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியையும், யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் உயர்தரக்கல்வியையும் பயின்று 1971 இலிருந்து 40 வருடங்கள் ஆசிரியையாக பணிபுரிந்து, துணுக்காய் வலயக்கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும், தென்மராட்சி வலயப் பணிப்பாளராகவும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகவும், முன்பள்ளிச் சிறார்களின் தாயாகவும் பணிபுரிந்து தனது 60 ஆவது அகவையில் ஓய்வுபெறும் அவர்களை சீரும் சிறப்புமாக வாழ்கவென நல்லூர் கந்தன் ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

திரு.சி.தவராசா, உத்தியோகத்தர் யாழ்.வலயம்,
துணைவி -த.அற்புதராணி, மகள்- த.மேனகா, ஆசிரியை,
சரஸ்வதி முன்பள்ளி, புத்தூர்.
த.நிரோஷன், த.நிலக்ஷன் மாணவன் - தரம்-9
யாழ். ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

பஞ்சுசீக வித்தியாலய வீதி,
புத்தூர்.

(5054)

அறிவற்ற சினேகிதனிடம் சேர்வதைவிட புத்திசாலியான விரோதியை அடைவதே மேல்.

- ஷேக்ஸ்பியர்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை அரசைக் காப்பாற்றும் வச்சிர ஆயுதம் தமிழர்களே!

நீண்ட பயணத்தை ஆரம்பித்த கப்பல் ஒன்றில் இருந்த குடிநீர் முற்றாக தீர்ந்து போனது. கப்பலில் இருந்தவர்கள் தண்ணீர்... தண்ணீர் என்று கண்ணீர் விட்டனர்.

அந்தக் கப்பலின் மாலுமியோ வயர்லஸ் மூலமாக ஏனைய கப்பல் தளபதிகளுடன் தொடர்பு கொண்டு எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் எனக் கேட்கின்றார்.

எங்கிருந்தும் நல்ல பதில் வரவில்லை.

கப்பலில் இருந்தவர்கள் வாடிவிட்டனர். மீட்சி பெறுவது சந்தேகமே என்ற நினைப்பு அவர்களைச் சூழ்ந்த வேளை கப்பல் மாலுமி கண்ணுக்கு தெரியக்கூடியதான தூரத்தில் வந்து கொண்டிருந்த கப்பல் தலைவனுடன் தொடர்பு கொண்டு,

ஐயா எங்களுக்குக் குடிப்பதற்கு தண்ணீர் தந்து உதவுங்கள் என்று கெஞ்சினான்.

அதற்கு, நீங்கள் நங்கூரம் இட்டுள்ள இடத்தில் உள்ள தண்ணீர் குடிக்கக்கூடியது. அதனை அள்ளி தாராளமாக பருகிக் கொள்ளுங்கள் எனப் பதில் வந்தது.

கப்பல் மாலுமி அதிர்ந்து போனார். அட! நாங்கள் நிற்கின்ற இடத்திலேயே குடிநீர் இருக்கும் போது தாகத்தால் வாடிப்போக நேரிட்டதே என்ற மன உறுத்தலோடு தண்ணீரை அள்ளிக் கப்பலிலிருந்த அனைவரும் பருகினர்.

என்னே அருமை. கிடைத்தற்கரிய குடிநீர் என நினைந்து மகிழ்ந்தனர்.

இந்தக் கதையில் வரும் கப்பல், கப்பல் மாலுமி, கப்பலில் இருப்பவர்கள் என்ற ஒழுங்கு முறையில் இந்த நாடு, நாட்டின் அரசியல் தலைமை, அங்கிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் என ஒப்பிட்டுப்பார்ப்பது பொருத்துடையது போல் தெரிகிறது.

அந்தக் கப்பல் மாலுமிபோல் இந்த நாட்டின் அரசியல் தலைமை, ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக உலக நாடுகள் முழுவதிடமும் கெஞ்சி மன்றாடுகின்றன.

ஐ.நா.சபையின் போர்க்குற்ற விசாரணையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என உலக நாடுகளிடம் கெஞ்ச, அந் நாடுகளோ இலங்கையின் ஆட்சி பீடத்திற்கு உதவத் தயாராக இல்லையென அறிவிக்கின்றன.

அதேநேரம் இலங்கையின் பலவீனத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்த நினைக்கும் சில நாடுகள் இலங்கைக்குள் நுழைந்து இலங்கையில் இருக்கக்கூடிய வளங்களை தமக்காக்கிக் கொள்வதுடன் தங்கள் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான தளமாகவும் இலங்கையைப் பயன்படுத்துகின்றன.

உண்மையில் ஐ.நா.சபையின் போர்க்குற்ற விசாரணையிலிருந்து இலங்கை தன்னை விடுவித்துக் கொள்வதற்கான வச்சிர ஆயுதம் இலங்கையிலேயே இருக்கிறது. அந்த வச்சிர ஆயுதம் இலங்கைத் தமிழர்களே.

இந்த உண்மையை இலங்கை அரசு அடியோடு மறந்து -மறைத்து இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு பரிபூரணமான தீர்வு உடனடியாக வழங்கப்படுமாக இருந்தால், ஈழத்தமிழர்கள் ஐ.நா. சபையிடம் சொல்வார்கள் 'மன்னித்தோம் நாம் ஒன்றாக வாழ்வோம்' என்று.

நாடெல்லாம் ஓடி உதவிகேட்டு மானம் போவதைவிட, இந்தநாட்டில் இருக்கக் கூடிய ஆயுதத்தைப் பயன்படுத்திதப்பித்துக் கொள்வது மகா புத்திசாலித்தனம்.

அட! தமிழர்கள் முன்பு இலங்கைக்கு எதிரான ஆயுதமாக இருந்தார்கள் இப்போது அவர்கள் இலங்கையைக் காப்பாற்றக் கூடிய ஆயுதமாக இருக்கிறார்கள்.

புரிகிறதா! உண்மை புரிந்தால் நீங்கள் தீர்வை தாருங்கள். நாங்கள் அஸ்திரத்தை ஏவுகின்றோம். அது ஐ.நாவை அமைதி கொள்ள வைக்கும்.

# ஈழத்தின் புகழ்பூத்த பன்மொழி அறிஞர் தவத்திரு கலாநிதி தாவீது அடிகள்



தமிழ் மொழியின் தகைமைசால் சிறப்பைத் தமிழினம் கருதிடாக் காலத்தில் 'நும்மொழியின் சான்ற சிறப்பைத் தமிழ் மக்களே இன் முழுவதூஉம் உணர் மின்' என வீரமுரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஒப்பி யல் அகராதியின் ஒப்பற்ற மேதை தவத் திரு கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீது அடிகளைச்சாரும்.

பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தில் மாவச்சை என்னும் ஊரில் 1907.06.28 இல் பிறந்த இவர், தனது கல்வியை யாழ்.சம்பத்திரியார் கல்லூரியில் ஆரம்பித்து உயர்நிலைக் கல்வியை முடித்தார்.

இவர் கருவிலே திருவுடையராக விளங்கியபடியால் 'என்னைப் பின்பற்றி வா' என்ற இயேசுவின் அருளுரையால் ஆட்கொள்ளப்பட்டு கொழும்பு புனித பேணாட் குருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று 1931 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

எழில்மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, ஈகையில் வள்ளல், பாரியை மிஞ்சும் கரங்கள், உருவத்தில் குறுமுனி அகத்தியர், நெப்போலியன் போன்று அபூர்வ ஞாபசக்தி மிக்கவர். நேரத்தை உயிர் போன்று செயலுருவப் படுத்தியவர். ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. மனித கணனியாகவும், நுண்ணறிவு மிக்க நடமாடும் பல்கலைக்கழகமாகவும் திகழ்ந்தவர். துறவியின் இடது கரத்தில் 'ரெனிஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'றக்கெற்' வலது கரத்தில் உத்தம மரியாளின் வீரவாள் ஆகிய திருச்செபமாலை. ஒரு முறை பார்த்தாலே நெஞ்சில் நிறைந்திடும் தோற்றப் பொலிவு. உந்துசக்திமிக்க ஆளுமை. இவற்றின் ஒட்டுமொத்தமே தாவீது அடிகள் என்பது வெள்ளிடமலை.

இவர் இலண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டத்துடன் முதுமாணி பட்டத்தினையும் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்ட ஒரு மாபெரும் கல்விமான்.

தாவீது அடிகள் புனித பத்திரிசியார் கல்லூரியில் 31 ஆண்டுகள் பணி புரிந்து சிறந்த அறிஞர்களை உருவாக்கியுள்ளார்.

'கருவறை தொடக்கம் கல்லறை வரை கற்க' என்பதற்கு சான்றாக திகழ்ந்தவர் தாவீது அடிகள் என்றால் அது மிகையாகாது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தான்தொடங்கிய சொற்சிறப்பு ஒப்பியல் அகராதியின் வேலை முற்றுப் பெறமுன் 1947.01.22 இல் மறைந்து விட்டார். இவரின் சீடரே தாவீது அடிகள்.

'விதியே விதியே தமிழ்ச்சாதியை என் செயக்கருதி இருக்கின்றாயடா' என்று பொங்கினான் பாரதி. ஆம் அந்தத் துர்ப்பாக்கிய நிலையில் தான்

## நாளை அவரது 30 ஆவது ஆண்டு நினைவு தினமாகும்

ஒப்பியல் அகராதி இருந்தது. அதை நிவர்த்தி செய்ய அடிகளார் சொற்பிறப்பியல் துறையில் ஆய்வுகளை மேற் கொண்டார். ஒரு பூரண பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய பாரிய பணியை பண வலிமை குன்றியிருந்தும், மனவலிமை குன்றாமல் குருவாகவும், முழுநேர ஆசிரியராகவும் ஆற்றிக்கொண்டே பல வருடங்களாக மொழி ஆராய்ச்சியில் கடினமாக உழைத்தார்.

ஒப்பியல் அகராதியில் 9 ஆவது பகுதியை சிங்கள மொழியில் தாவீது அடிகள் எழுதத் திட்டமிட்டார். இதனால் தேசிய ஒருமைப்பாடு உருவாகும் என உணர்ந்து உழைத்த உத்தமர் ஆவர். 'தொல்திராவிடம்' அன்றேல் சீரிய சிறந்த (தமிழ்) மொழியை விளக்கிச் சாதனை நிலைநாட்டிய மாமேதை இவர். அவை மட்டுமல்லாது, சிங்களம் தமிழின் தங்கை என்று ஆதாரபூர்வத்துடன் நிரூபித்துக்காட்டிய முதல் அறிஞர் தாவீது அடிகள்.

கி.மு.100ஆம் ஆண்டளவில் தோன்றிய கலித்தொகை, குறுந்தொகை போன்ற நூல்களில் வரும் 'யாழ்' என்ற சொற்கள் காதலன் காதலியை, தோழன் தோழியை அழைப்பதாக வருகின்றது என்றும், எனவே தமிழ் 'யாழ்' என்ற சொற்களில் இருந்து தான் சிங்கள யாழுவ (Yaaluva) பிறந்தது என்றும் இங்ஙனம் 4 ஆயிரம் பதங்கள் சிங்களத்திற்கும், தமிழிற்கும் பொது வானவை என்பதை அறிஞரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

யாழ்.நூலகமும் தாவீது அடிகளும் 1981.06.01 நடு இரவில் அப்போதுள்ள யாழ்.நூலகம் விலைமதிப்புக்குரிய 97 ஆயிரம் நூல்களுடன் தீக்கிரையாக்கப்பட்டது.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மேன்மாடி கட்டடத்தில் உள்ள மேற்குப்பக்க அறையில் வாழ்ந்து கொண்டிருந்த 74 வயதுடைய தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்றதும் பேரதிர்ச்சியினால் உயிர் துறந்தார். யாழ்.நூலகத்தை உருவாக்கினாலும், நடமாடிய பல்கலைக் கழகமாகிய தாவீது அடிகளை யாரால் உருவாக்க முடியும்?

பிதாலோங், தாவீது அடிகள் ஆகிய பேரறிஞர்களின் ஆன்மா சாந்தி பெற, யாழ்.நூலகம் உயிரூட்டம் பெற இலங்கை அரசும், தமிழ் மக்களும் பங்கெடுப்பது முக்கிய கடமையாகும்.

யாழ்.நூலகத்தில் ஒரு பகுதியில் தமிழ் ஆய்வு அகம் உருவாக்கப்பட்டு, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி தாவீது அடிகள் ஆகியோரின் சகல ஆய்வு நூல்களும், ஏனைய அறிஞர்களின் ஆய்வுக்குரிய நூல்களும் இடம் பெறச் செய்வதனால் தாவீதின் பணி தொடர வழிபிறக்கும்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கு உழைத்து பலியான தாவீது அடிகளைத் கௌரவித்து அரசு முத்திரை வெளியிட வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகம் புத்திஜீவிகளின் குழு மூலம் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி முற்றுப் பெறவழிசெய் வது தமிழ் அன்னைக்குச் செய்யும் முக்கிய பணியாகும்.

**துரை. ஆரோக்கிதாசன்**
ஆசிரியர் கலாசாலை,
முன்னாள் பிரதி அதிபர்

## தரம்-1க்கு மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் தரம் 1 மாணவர்களுக்கான அனுமதி விண்ணப்பப்படிவம் நாளை புதன்கிழமை முற்பகல் 8 மணியிலிருந்து 2 மணிவரை அலுவலகத்தில் வழங்கப்படும் என அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## மருத்துவ ஆய்வுகூட உரிமையாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல மருத்துவ ஆய்வுகூட உரிமையாளருக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே யாழ். மாவட்டத்திலுள்ள சகல மருத்துவ ஆய்வு கூடங்களின் உரிமையாளர்களும் இக் கலந்துரையாடலை தவறாது பங்குபற்றுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கொடுப்பவனாக வாழுங்கள்



கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே, நீ பட்டினியாய் கிடக்க நேர்ந்தாலும், உன்னிடத்திலுள்ள கடைசிப் பருக்கையையும் பிறருக்குக் கொடுத்துவிடு. அவ்வாறு பிறருக்கு கொடுப்பதாலேயே நீ பூரணமடைவாய் தெய்வமாகவும் ஆவாய்.

தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் புறத்தேயுள்ள எதற்கும் வசப்பட மாட்டான். அதன் பின் அவனுக்கு அடிமைத்தனம் எதுவுமில்லை. அவன் மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகைய நிலைமை அடைந்தவனே உலகத்தில் நன்றாக வாழக்கூடிய தகுதி பெற்றவனாவான்.

அன்பைக் கொடு, உதவியைக் கொடு , பணியைக் கொடு இவ்வாறு உலகில் எப்போதும் கொடுப்பவனாக நிற்க வேண்டும். பதிலுக்கு ஒன்றையும் எதிர்பார்க்கக்கூடாது. இறைவன் நமக்குக் கொடுப்பது போன்று நமது ஈகை குணத்தால் நாமும் கொடுப்போம்.

தூய்மையான மனதைப் பெறுவதுடன் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அவனை சார்ந்து நிற்க முனைவதுடன் நன்னெறியில் நிற்க வேண்டும்.

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி 16 வயது சிறுவன் சாதனை

(காத்மண்டு)

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இங்கிலாந்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் புதிய சாதனை படைத்துள்ளான். உலகின் மிகப் பெரிய சிகரம் என அழைக்கப்படுவது இமாலய மலைப்பகுதியான எவெரஸ்ட் சிகரம். இது 8850 அடி உயரமானதாகும்.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் சர்பிடான் பகுதியைச் சேர்ந்த அட்கின்ஸ்டான் வயது16 என்ற பாடசாலை மாணவன் நேபாள், சீனா, இங்கிலாந்து மலையேற்றக்குழுவினருடன் திபெத் பகுதியிலிருந்து எவெரஸ்ட் சிகரத்திற்கு பயணம் மேற்கொண்டான். நேற்று முன்தினம் வெற்றிகரமாக எவெரஸ்ட் சிகரத்தை அடைந்ததாக மலையேற்றக் குழுவின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஜானிகொலிஸ்ன் (வயது 17) சிறுவன்தான் இந்தச் சாதனையை எட்டியிருந்தான். அவனது சாதனையை அட்கின்ஸான் (வயது 16) சிறுவன் முறியடித்துள்ளான். மேலும் இன்னும் மூன்று நாட்களில் இவர் தனது 17 ஆவது வயதினை கொண்டாடவுள்ளார். அதற்கு முன்னதாகவே 16 வயதில் இந்தச் சாதனையை எட்டியுள்ளார். முதன்முதலாக கடந்த 2005 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் உள்ள கிளிமஞ்சரோ மலையில் ஏறி தனது மலையேற்ற பயிற்சியை ஆரம்பித்தான். இது வரை 6 மலைச் சிகரங்களில் ஏறி சாதனை படைத்த அட்கின்சன் 7 ஆவது எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து இந்தச் சாதனையை படைத்துள்ளான். (ஸ்ரீ-2)

# பின்லேடனின் மறைவிடத்தை காட்டிக் கொடுத்த தலிபான் தலைவர்

(லண்டன்)

பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத்தில் ஒரு வீட்டில் பதுங்கியிருந்த அல்கொய்தா தீவிரவாதி பின்லேடன் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவருக்கு கூரியர் கடிதம் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து வந்த அபுஅகமது அல்குவைதியின் தொலைபேசி பேச்சை ஒட்டுக் கேட்டுத்தான் பின்லேடனின் இருப்பிடத்தை அமெரிக்கா மோப்பம் பிடித்ததாக தகவல் வெளியானது.

தற்போது அது உண்மை இல்லை. பின்லேடன் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்தது தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் முல்லா அப்துல் ஹானிபிரமர் என தெரிய வந்துள்ளது. இந்த தகவலை இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இவர் பின்லேடனின் நண்பர்களில் ஒருவராக திகழ்ந்தவர். தலிபான் இயக்கத்தை தோற்றுவித்த தலைவர்களில் ஒருவராவார். ஆப்கானிஸ்தானில் நடைபெறும் குண்டு வெடிப்பு சம்பவங்களை நிகழ்த்தி வருவதில் வல்லவர்.

இது தொடர்பாக கடந்த ஆண்டு பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் அமெரிக்க படையினரால் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் அமெரிக்க புலனாய்வு துறையினர் விசாரணை நடத்தினர்.

அப்போதுதான் பாகிஸ்தானில் பின்லேடன் பதுங்கி இருந்த இரகசிய இடம் பற்றி அவர் அமெரிக்க உளவுத்துறையிடம் தெரிவித்தார்.

இது குறித்து ஒரு இரகசிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதாவது தலிபான்கள் அதிகம் இருக்கும் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் ஆக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அதை அமெரிக்கா ஏற்று அறிவித்தது. இதற்கிடையே கடந்த ஒக்டோபர் மாதம் அவர் விடுவிக்கப்பட்டார். இந்த தகவலும் அந்த பத்திரிகையில் வெளியாகியுள்ளது. (ஸ்ரீ-2)

# ஒசாமா பதுங்கியிருந்த வீட்டில் அமெ.புலனாய்வுத்துறை ஆய்வு

(இஸ்லாமாபாத்)

அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட இடத்தில் முக்கிய தடயங்கள் ஏதேனும் உள்ளனவா என அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் சமீபத்தில் அமெரிக்க கொமாண்டோ படையினரால் கொல்லப்பட்டார். அந்த இடத்தில் முக்கியமான தடயங்கள் ஏதேனும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அரசுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இதையடுத்து அமெரிக்க புலனாய்வு அமைப்பில் உள்ள தடயவியல் நிபுணர்கள் ஒசாமா கொல்லப்பட்ட வீட்டில் சோதனை நடத்தியதாகவும் இந்தச் சோதனை ஆறுமணி நேரம் நீடித்ததாகவும் பாகிஸ்தான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதிகாரிகள் நடத்திய இந்த சோதனையின் போது பத்திரிகையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இருந்தாலும் இது தொடர்பான அதிகாரபூர்வமான செய்தி எதுவும் வெளியிடப்படவில்லை. (ஸ்ரீ-2)

# உளவறிந்த குற்றச்சாட்டில் ஈரான் அதிகாரி கைது

(கெய்ரோ)

எகிப்தில் ஹோஸ்னி முபாரக் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின் அந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஈரான் அரசுக்கு உளவறிந்து சொன்னதாக ஈரான் தூதரக அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எகிப்தில் உள்ள ஈரான் தூதரக அதிகாரி காசிம் அல் உசேனி என்பவர் முபாரக் வெளியேற்றத்துக்குப் பின் எகிப்து அரசியலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் குறித்து உளவறிந்து பல்வேறு தகவல்கள் அளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று கைது செய்யப்பட்டார்.

கடந்த 1979 இல் இஸ்ரேல் உடன் எகிப்து உறவை ஏற்படுத்திக் கொண்டபின் ஈரான் எகிப்துடனான தனது உறவை துண்டித்துக் கொண்டது. அதன் பின் இரு தரப்புக்கும் இடையில் தூதரக ரீதியாக முழுமையாக உறவுகள் பேணப்படவில்லை. எனினும் குறைந்த அளவிலான தூதரகச் செயற்பாடுகளை இரு நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன. (ஸ்ரீ-2)

# எகிப்தில் பழங்கால கல்லறைகள், குடியிருப்புகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

எகிப்தில் செயற்கைக்கோள் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லறைகள் மற்றும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பழங்கால்க் குடியிருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

அமெரிக்கா அலபாமா மாகாணத்தின் பிர்மிங்ஹாம் நகரில் இயங்கி வரும் அலபாமா பல்கலைக்கழகத்தில் எகிப்திய கலாசாரம் பற்றி ஆய்வு செய்து வரும் டாக்டர் சாரா பர்காக் என்பவர் தலைமையில் ஒரு குழு கடந்த ஓராண்டுக்கும் மேலாக எகிப்து பிரமிட்டுகளை பற்றி ஆய்வு செய்து வந்தது.

இக்குழுவின் கோரிக்கைக்கு இணங்க எகிப்தில் எந்தெந்த இடங்களில் மண்ணில் பிரமிட்டுகள் புதைந்துள்ளன என்பதை கண்டறிவதற்காக அமெரிக்க விண்வெளி மையமான நாசாவின் துணையோடு ஒரு செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டது. பூமியில் இருந்து 700 கி.மீ. உயரத்தில் நிலை கொண்ட அந்த செயற்கைக்கோளில் இருந்து எகிப்தின் குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி அகச் சிவப்புக் கதிர்கள் (இன்ப்ரா ரெட் லைட்) செலுத் தப்பட்டபோது 17 முக்கியமான பிரமிட்டுகளும் ஆயிரக்கணக்கான கல்லறைகள் மற்றும் மக்கள் குடியிருப்புகள் மண்ணில் புதைந்தி ருப்பது தெரிய வந்தது.

இவை அனைத்தும் 4 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முந்தையவை என்பது குறிப்பிடத்தக்கது.தற்போதைய டானிஸ் நகரின் அடிப்பகுதியில் மிகப் பெரிய பழைய குடியிருப்பு ஒன்று மிக ஒழுங்காக திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டிருப்பதும் சக்காரா மற்றும் சன் எல் ஹகர் ஆகிய நகரங்களில் பல பிரமிட்டுகள் மண்ணுக்கடியில் இருப்பதும் இதன் மூலம் தெரியவந்தது.செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டிருந்த சக்திவாய்ந்த நுண்ணிய கமராக்கள் மூலம் இந்தப் பகுதிகள் அனைத்தும் படம் பிடிக்கப்பட்டன. (ஸ்ரீ-2)




இரண்டாவது முறையாக எம்.எல்.ஏ.வாக பதவியேற்ற முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு சபாநாயகர் ஜெயக்குமார் கைகுலுக்கி வாழ்த்து தெரிவிப்பதை படத்தில் காணலாம்.




உலகின் மிகப் பெரிய சோலர்படகு அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளதை படத்தில் காணலாம்.

# ஒபாமாவின் மிகப்பெரிய ஊழல் விரைவில் வெளிவரும்

(லண்டன்)

அமெரிக்காவில் அடுத்தாண்டில் ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ளது. இந்நிலையில் அந்தத் தேர்தலுக்கு முன் அடுத்தாண்டு ஜூன் மாதத்திற்குள் ஜனாதிபதி ஒபாமா நிர்வாகத்தில் நடந்த மிகப் பெரிய ஊழல் ஒன்று வெளியுலகுக்கு தெரியவரும் என்று பிரண்டன் நைஹான் என்பவர் தெரிவித்துள்ளார்.

பிரண்டன் நைஹான் என்பவர் அமெரிக்காவில் அரசியல் நிபுணராகவும் ஊடக விமர்சகராகவும் செயற்பட்டு வருகிறார். இவர் கடந்த 1977 தொடக்கம் 2008 வரையிலான அமெரிக்க ஜனாதிபதிகளின் ஊழல்கள் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி ஒபாமாவின் ஊழல் அடுத்தாண்டு ஜூன் மாதத்திற்குள் வெளியுலகுக்கு தெரிய வரும். அமெரிக்காவின் மிகச் சில ஜனாதிபதிகள் தாங்கள் ஆட்சியில் நீடிப்பதற்காக ஊழலைத் தவிர்த்தனர். இதை ஜனாதிபதிகள் பற்றிய என்னுடைய ஆராய்ச்சியில் நான் கண்டறிந்தேன். அவ்வகையில் ஒபாமா மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர். ஒபாமா நிர்வாகத்துக்கு ஆதரவாக இல்லாத ரிபப்ளிகன் கட்சியின் ஒரு சிலரின் ஆதரவுடன் நான் எனது ஆய்வை முடித்துள்ளேன்.

தங்கள் ஆட்சியில் முதன்முறையாக ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சந்தித்த ரொனால்ட் ரீகன் மற்றும் பில் கிளின்டன் ஆகியோரைப் போல ஒபாமாவும் வீழ்ச்சியடைவார் என பிரண்டன் நைஹான் தெரிவித்தார். (2-4)

## திரிம்லெட்-சுவான் கூட்டணி ஆக்ரோஷம்

# 82 ஓட்டங்களுடன் சுருண்டது இலங்கை; இங்கிலாந்து அணிக்கு இன்னிங்ஸ் வெற்றி



(கார்டிப்)

திரிம்லெட்-சுவான் கூட்டணியின் ஆக்ரோஷ பந்துவீச்சில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 82 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணி முதலாவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி கார்டிப்பில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 400 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 491 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் 5ஆவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 496 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் திரோட் 203 ஓட்டங்களையும் குக் 133 ஓட்டங்களையும் பெல் ஆட்டமிழக்காமல் 159 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 103 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந் நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 82 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் இலகு வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் அறிமுக வீரர் திசார பெரேரா 20 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 15, சங்கக்கார 14, மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 12 அணித்தலைவர் டில்சான் 10 ஓட்டங்களையும் அதிகப்படியாக எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 7 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைமாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் திரிம்லெட் 10 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பிரோட் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இதேவேளை அணித்தலைவர் பதவியில் தனது முதலாவது டெஸ்டில் விளையாடிய டில்சான் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்துள்ளார்.

# மேற்கிந்தியத்தீவுகள் அணியில் கிறிஸ் ஹயில் புறக்கணிப்பு

இந்திய கிரிக்கெட் அணி ஒரு இருபது -20,5 ஒரு நாள் போட்டி ,3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட மேற்கிந்தியத் தீவுகள் செல்கிறது.

இருபது -20 போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி நடக்கிறது.

இப்போட்டியில் விளையாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் ஐ.பி.எல்லில் அசத்தி தொடர் நாயகன் விருதை வென்ற ஹயில் சேர்க்கப்பட வில்லை.

ஐ.பி.எல்.போட்டியில் விளையாடு வதற்கு முன் அவர் தனது ஒப்பந்தத்தை புதுப்பிக்க வில்லை. அத்துடன் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அவரை சேர்க்காததால் ஜமெக்கா ரேடியோவில் மேற்கிந் தியத்தீவுகள் கிரிக்கெட் சபை பற்றி சர்ச்சைக்குள்ளான வகையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த 2 காரணங்களுக்காக அவரது பெயரை பரிசீலனை செய்ய வில்லை. அதேசமயம் போலார்ட், பிராவோ ஆகியோர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இந்தியா-மேற்கிந்தியத் தொடர் அட்டவணை

| திகதி | போட்டி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| ஜூன் 04 | இருபது-20 | இரவு 7.30 | டிரினிடாட் |
| ஜூன் 06 | முதல் ஒருநாள் | இரவு 6.30 | டிரினிடாட் |
| ஜூன் 08 | 2வது ஒருநாள் | இரவு 6.30 | டிரினிடாட் |
| ஜூன் 11 | 3வது ஒருநாள் | இரவு 6.30 | அன்டிகுவா |
| ஜூன் 13 | 4வது ஒருநாள் | இரவு 6.30 | அன்டிகுவா |
| ஜூன் 16 | 5வது ஒருநாள் | இரவு 7.30 | ஜமெக்கா |
| ஜூன் 20-24 | முதல் டெஸ்ட் | இரவு 8.30 | ஜமெக்கா |
| ஜூன் 28-ஜூலை 02 | 2வது டெஸ்ட் | இரவு 7.30 | பார்படோஸ் |
| ஜூலை 6-10 | 3வது டெஸ்ட் | இரவு 7.30 | டோமினிக்கா |

# காலிறுதியில் நடால்

(பாரிஸ்)

பிரெஞ் ஓபன் டெனிஸ் பெண்கள் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி முன்னேறியது. ஆண்கள் ஒற்றையர் காலிறுதிக்கு உலகின் நம்பர்-1 வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் தகுதி பெற்றார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில், கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் நேற்று நடந்த பெண்கள் இரட்டையர் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி, ஆர்ஜெண்டினாவின் டல்கோ, இத்தாலியின் பிளவியா பெனிட்டா ஜோடியை சந்தித்து. இதில் அபாரமாக ஆடிய சானியா ஜோடி 6-0, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.



**நடால் அபாரம்**

ஆண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றில் ஸ்பெயினின் ரபெல் நடால், குரோஷியாவின் இவான் ஜுபிச்சை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் 7-5, 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ஆர்ஜென்டினாவின் ஜுயன் இன்னாசியா செல்லா 4-6, 6-2, 1-6, 7-6, 6-2 என்ற செட் கணக்கில் கொலம்பியாவின் அலிஜாண்டிரோ பெல்லாவை வீழ்த்தி, காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**லீ நா அபாரம்**

பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றில் சீனாவின் லி நா, செக்குடியரசின் பெட்ரா கெவிடோவாவை சந்தித்தார். இதில் லி நா 2-6, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலி றுதிக்கு முன்னேறினார்.

# சென்னை வீரர்களுக்கு ரூபாய் 20 கோடி பரிசில்

ஐ.பி.எல்.தொடர் 4 இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி பெற்றதால் அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். தொடர் 5 போட்டி இறுதிப்போட்டியை நடத்தும் வாய்ப்பையும் சென்னை பெற்றுள்ளது.

இதை பி.சி.சி.ஐயும் உறுதி செய்துள்ளது. ஐ.பி.எல்.விதிப்படி சம்பியனாகும் அணிக்கு இறுதிப்போட்டி நடத்தும் வாய்ப்பு வழங்கப்படும்.

அதனடிப்படையில் சென்னைக்கு தொடர்ந்து 2ஆவதுமுறையாக இறுதிப் போட்டியை நடத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

சம்பியனை சென்னை வென்றதும் வீரர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு பரிசுத்தொகை ரூபாய் 10 கோடியுடன் அணி நிர்வாகம் கூடுதலாக ரூபாய் 10 கோடி கொடுத்து உற்சாகப்படுத்தியது.

வீரர்கள், பயிற்சியாளர்கள், உதவியாளர்கள் என அனைவருக்கும் இந்த தொகை பிரித்து வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் நடக்கவிருந்த கொண்டாட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டு வீரர்கள் சொந்த ஊருக்கு திரும்புவதில் ஆர்வம் காட்டினர்.

ஏனெனில் இந்திய அணி வீரர்கள் சிலர் மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்ய இருப்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் காலம் நீடிப்பு

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு படைமுகாம்களில் தற்போது வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சிக்கான காலம் போதாமையினால், அடுத்த வருடத்தில் இருந்து இப்பயிற்சிக் காலத்தை இரண்டு முதல் மூன்று மாதங்கள் வரை அதிகரிக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிக் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, உயர்கல்வி அமைச்சர் திஸாநாயக்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,


தற்போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில் எவ்விதமான இராணுவப் பயிற்சிகளும் வழங்கப்படுவதில்லை. இப்பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு துப்பாக்கி சுடுவதற்கோ, குண்டுகளை வீசுவதற்கோ அல்லது யுத்த ஆயுதங்களை இயக்குவதற்கோ பயிற்சி வழங்கப்படவில்லை.

பல்கலைக்கழங்க மாணவர்களிடம் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த மாணவர்களின் உடுதுணிகளை இன்னும் அவர்களின் தாய்மார்களே கழுவிக்கொடுக்கின்றனர். இவர்கள்சாப்பிடப்பயன்படுத்தப்படும்கோப்பைகளையும் இவர்களின் தாய்மாரே கழுவுகின்றனர். இவ்வகையில் பல்கலைக்கழங்களுக்குத் தெரிவாகும் மாணவர்கள் பூரணமற்ற நிலையிலேயே உள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிஅறைகளைநான்பார்த்துள்ளேன். அது அழுக்குப் படிந்தும், துர்நாற்றம் கொண்டதாகவும் காணப்பட்டன. அவர்களின்சாப்பாட்டுஎச்சங்கள்அவர்களுடைய கட்டிலின் கீழ் காணப்பட்டுள்ளன. எனவே இந்த மாணவர்களை நாம் சிறந்த வர்களாக மாற்ற வேண்டும்.

சரியாகப் பார்த்தால் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 21நாட்களைக் கொண்ட பயிற்சிநெறி போதாது. அடுத்தவருடம்முதல் இரண்டு முதல் மூன்று மாதமாக இந்தப் பயிற்சிநெறியின் காலத்தை நாம் அதிகரிக்கவுள்ளோம். என அவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# ஈழத் தமிழரின் பிரதிநிதியா... வைகோ பெல்ஜியத்திற்கு விஜ...



(சென்னை)

ஈழத் தமிழர் இனப் படுகொலை குறித்து பிரஸ்ல்ஸ் நகரில் நடைபெறவுள்ள விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுவதற்கு மதி... செயலாளர் வைகோ நே... ஜியம் பயணமாகியுள்ளார்...

இது தொடர்பாக மதிமு... மைச் செயலகம் அறிக்... றை வெளியிட்டுள்ளது. ... ல்ஸ் நகரில நாளை நட... வுள்ள ஐரோப்பிய நாடாளு... உறுப்பினர் கூட்டு அமைப்... டத்தில் வைகோ உரையாற்று...

ஐரோப்பிய நாடாளுமன்ற... பினர்களின் கூட்டு அமைப்... தமிழர் இனப் படுகொலை ... விவாதிக்க ஒரு கூட்டத்தை ... செய்துள்ளது. இந்தக் கூட்ட... ஜியம் நாட்டின் தலைநகர் பிர... நகரில், ஐரோப்பிய ஒன்றிய ந... மன்றக் கட்டிட வளாகத்தில் ... அரங்கில் நாளை புதன்கிழமை... பெறுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளு... உறுப்பினர்களும், உலகெங்... ள்ள மனிதவுரிமை ஆர்வலர்... இக் கூட்டத்தில் பங்கேற்கிற... இந்தக் கூட்டத்தில் ஈழத் தமிழர்... பில்கலந்துகொண்டுஉரையாற்... மறுமலர்ச்சி திராவிட முன்னே... கழகப் பொதுச் செயலாளர் வை... வுக்கு, ஐரோப்பிய நாடாளுமன்ற... பினரும், ஒருங்கிணைப்பாளரு... பால் மர்பி அழைப்பு விடுத்துள்...

ஈழத் தமிழர்களின் துயர் ... க்க மேற்கொள்ளவேண்டிய ந... கைகளைக் குறித்து, இந்தக் ... முடிபு எடுக்க இருக்கின்றது. ... கலந்துகொள்வதற்காக, வை... இன்று அதிகாலை ஒருமண... வில் சென்னை விமான நிலை... தில் இருந்து பிரஸ்ல்ஸ் நகரு... புறப்பட்டுச் சென்றார்.

## சனல் 4 வெளியிட்ட...

ஐந்து நிமிடங்கள் கொண்ட இந்த வீடியோக் காட்சிகள் அடங்கிய இப்பதிவானது தனக்குப் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியிடம் இருந்து கிடைத்ததாக அவர் தனதறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற போரின்போதுஅரசாங்கம் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை சனல் 4 தொலைக்காட்சி கடந்த வருடம் வெளியிட்டிருந்தது.

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் அரசாங்கத் தரப்பின் உயர் மட்டக் கட்டளைகளுக்கு அமைய தமிழ் மக்கள் கண்மூடித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டதாக சனல் 4 தொலைக்காட்சியின் வெளிநாட்டுச் செய்தியாளர் ஜொனாதன் மில்லர் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது குறித்து படைத்தரப்பின் சிரேஷ்ட படையதிகாரி ஒருவரும், களமுனையில் நின்ற படைச் சிப்பாய் ஒருவரையும் மேற்கோள் காட்டி சனல் 4 தொலைக்காட்சி ஆதாரபூர்வமாகச் இச் செய்தியை வெளியிட்டிருந்தது.

ஆனால் இக் காணொளிக் காட்சி போலியானது என இலங்கை அரசாங்கம் நிராகரித்த நிலையில் இக் காணொளிக் காட்சி முற்றிலும் உண்மையானது என்பதை தொழில்நுட்ப ஆய்வுகள் உறுதிசெய்யப்பட்டிருந்ததாக அவர் தனதறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக் காணொளிக் காட்சி உண்மையானது என தொழில்நுட்ப ஆய்வுகள் ஊடாக உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் 2009ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்டு கைவிடப்பட்ட, அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானம் மீண்டும் இக் கூட்டத்தொடரில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ச-5,6)

## இலங்கை குறித்த...

எந்தவிதமான அடிப்படையும் கிடையாது. இத்தகைய உறுப்படுத்தப்படாத தகவல்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை முற்றிலும் தேவையற்றது.

இலங்கை அரசாங்கம் அங்கு தேசிய நல்லிணக்கத்துக்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவை படிப்படியாக பலன் தந்து கொண்டிருக்கின்றன எனவும் அவர் கூறினார்.

இலங்கை போர் குறித்த ஐ.நா செயலரின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆதரவாக வேறுபல நாடுகளும் அங்கு பேசியிருக்கின்றன.

ஐரோப்பி ஒன்றியம் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள், நிபுணர் குழுவின் அறிக்கையை, வரவேற்றதுடன் அதன் பரிந்துரைகளை இலங்கை அமுல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் கள்.

ஆனால், இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் மீண்டும் எடுத்தி ருப்பது ஐ.நாவின் இரட்டை போக்கை காண்பிப்பதாக கியூபாவின் பிரதிநிதியான றோடொல்ப் ரியிஸ் றொட்ரிகஸ் பேசினார். வளரும் நாடுகளை உலக சக்தி மிக்க நாடுகள் அடக்கப் பார்ப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கை அரசாங்கமும், இலங்கை மக்களும் தமது உள்ளூர் விடயங்களை தாமே கையாளும் வல்லமை உள்ளவர்கள் என்று கூறிய சீனாவின் பிரதிநிதி, அதற்கு ஐ.நா. தனது ஆதரவை வழங்கவேண்டும் என்று கூறினார். (ச-5;6)

## ஜூலை 23...

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் நிராகரிக்கப்பட்ட 33 வேட்புமனுக்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு வேட்பு மனுக்களும் மீள ஏற்றுக் கொள்ளப்பட்டன. (ச-5)

**முகாமைத்துவ வேலைவாய்ப்பு**

One World in Innovage Int. (Pvt) Ltd நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் (Marketing), வணிகம் (Business) ஆகிய துறைகளுக்காக முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேவை. 06 மாத கால பயிற்சியின் பின் அடிப்படைச் சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு மற் றும் ETF, EPF மருத்துவக் காப்புறுதி இல வசமாக வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு:-
0776219536, 0775566224

(6055)

## வடக்கு மாகாண பாடசாலைகளில் பணிபுரியு...

# கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு... நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை...

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றும் 352 பேருக்கு நிரந்தர அதிபர் நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவை அனு மதிப்பத்திரம் கல்வி அமைச்சரினால் அமைச்சரவையில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதற்கான தகவல்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக கல்வி அமைச்சு பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நாட்டிலுள்ள பாடசாலைகளில் இரண்டு வருடங்களுக்கு மேல் கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றுபவர்களை நிரந்தர அதிபர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்நடவடிக்கைக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் கல்வி அமைச்சரினால் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதில் வடக்கு மாகாண... சாலைகளில் கடமையாற்றும்... கடமை நிறைவேற்று அதிபர்க... விபரமும் வடக்கு மாகாண... வித் திணைக்களத்தின் ஊ... கல்வி அமைச்சு பெற்றுள்ள...

இவ்வாறு கடமை நிறைவே... அதிபர்களாக கடமையாற்று... களை நிரந்தர அதிபர் சேவை... இணைக்கும் திட்டம் இம்மு... டன் நிறுத்தப்படும் என ... அமைச்சர் பந்துல குணவர்... தெரிவித்திருந்தமை குறிப்பி... கது.

## நிபுணர் குழுவின்...

கள் தொடர்பாக ஒரு பூரண விசாரணையை நடத்தவேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள்குழுமுன்வைத்துள்ளபரிந்துரைகளை நிறை வேற்றவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு உள்ளது என்பதைசுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த விசாரணைகளை கண்காணிப்பதற்கு ஏற்ற ஒரு சர்வதேசப் பொறிமுறை குறித்து நிபுணர்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளையும் நான் பூரணமாக ஆதரிக்கிறேன்.

முக்கியத்துவம் வாய்ந்த நிபுணர்கள் குழு அறிக்கை வெளியிட்டுள்ள புதிய தகவல்கள் குறித்தும் இவ் மனிதவுரிமைகள் ஆணைக்குழு கவனத்திற் கொள்ளவேண்டியது அவசியமானது.

இக் கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் மனிதவுரிமைகள் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க, நீர்பாசனத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (மற்றொரு செய்தி உள்ளே) (ச-5,6)

## ஈழத் தமிழர் பிர...

நடந்து வருகிறது.

இலங்கைப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் விரிவாகப் பேச்சு நடத்தினார். இலங்கைத் தமிழர் விவகாரம் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளும் அப்போது விவாதிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுத் தொடர்பான விவரங்கள் கூட்டறிக்கையில் இடம் பெற்றுள்ளது. இரு தரப்பும் ஒப்புக் கொண்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும். ...

இலங்கையில் தமிழர்கள் ம... யமர்த்தும் பணிக்காக இந்திய... வழங்கிய ஆலோசனையின்... இந்தியா- இலங்கை வெளி... அமைச்சர்கள், செய... கொண்ட குழு அமைக்கப்பட... இதன் மூலம் இலங்கையில் ... தமிழர்களுக்கு நல்ல பலன் கி... கும் என்று நம்புகிறேன் என ... மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்...